
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 18 2023

செவ்வாய்க்கிழமை ஜூலை 18, 2023 | ஒளி: 09 கதிர்: 042 | பக்கம்: 07 | நகரப்பதிப்பு | FREE



### வடக்கு, கிழக்கைச் சேர்ந்த

## தமிழ் எம்.பிக்களுடன் அமெரிக்க தூதுவர் பேச்சு

வடக்கு, கிழக்கில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவான தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுடன், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங், திங்கட்கிழமை (17) முக்கிய கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

தமிழ்த் தலைவர்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபடுவதில் பெருமையடைகிறேன் என்று அவர் தனது டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உண்மை, நல்லிணக்கம், நீடித்த அமைதிக்காக இலங்கை பாடுபடுவதால், அதிகாரப்பகிர்வு, காணி திரும்பப் பெறுதல், காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கான பதில்களைக் கண்டறிதல், பாரிய புதைகுழிகள் தொடர்பான விசாரணைகள் உள்ளிட்டவற்றின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

## சாணக்கியனை தாக்க முயற்சி; இருவர் மீது துரத்தித் துரத்தி தாக்குதல்

*கனகராசா சரவணன்*



மட்டக்களப்பில் அனுமதிபத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பஸ்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து, திங்கட்கிழமை (17) ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனை தாக்க முயன்ற இருவரை, ஆர்ப்பாட்டகாரர்கள் துரத்தித்துரத்தி அடித்து வெளியேற்றியதையடுத்து, அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டது.

சட்டவிரோத அனுமதிப்பத்திரம் வழங்கல், ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த தனியார் போக்குவரத்து பொறுப்பதிகாரியின் ஊழல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே எம்.பியை இருவர் தாக்க முயன்றுள்ளனர்.

தொடர்ச்சி P2

### மாணவியை தாக்கிய விவகாரம்

## விசாரணைக்கு சென்ற கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல்

யாழ். தீவக வலய பாடசாலை ஒன்றில், அதிபரால் மாணவி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக திங்கட்கிழமை (17) காலை பாடசாலையில் விசாரணைகளை நடத்தச் சென்ற கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

### நீதிமன்றத்துக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும்

# அரசாங்கம் அழுத்தம் கொடுக்கப்போகிறது

- மக்கள் வெறுத்த பழைய முறைமையையே தெரிவுக் குழுவின் ஊடாக தொடர்ந்தும் நடைமுறையாகும்
- அரசின் கருத்துகளுக்கு ஏற்ப நீதிபதிகள் செயற்படவில்லை என்றால், தெரிவுக்குழு முன் கொண்டு வந்து அழுத்தம் கொடுக்க வாய்ப்பு



பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல் என்ற தொனிப்பொருளில் அரசாங்கம், நீதிமன்றத்துக்கும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கம் திடீரென பாராளுமன்ற அலுவல்களுக்கான குழுக் கூட்டத்துக்கு திங்கட்கிழமை (17) அழைப்பு விடுத்து, செவ்வாய்க்கிழமை (18) நாட்டின் தேர்தல் வேலைத்திட்டத்தில் தேர்தல் ஆணைக்குழு மற்றும் அதன் அங்கத்தவர்கள் எவ்வாறு செயற்பட்டனர் என்பது குறித்து ஆராய, 'தெரிவுக் குழு'வொன்றை நியமிப்பதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு உள்ளதாக குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று (17) விடுத்துள்ள விசேட காணொலி ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இன்றைய தினம் (18) தேர்தல் ஆணைக்குழுவின் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் செயற்பாடுகள் தொடர்பான தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட உள்ளமையானது, தற்போதைய தேர்தல் ஆணைக்குழு அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல், வரம்புகளுக்குள் செயற்பட வேண்டும் என்பதையும், இல்லாவிட்டால், பாராளுமன்றத் தெரிவுக் குழு முன் ஆஜராக வேண்டும் என்ற தெளிவான முறையற்ற அச்சுறுத்தல் விடுப்பதற்குமே என்றார்.

தொடர்ச்சி P2

## தமிழ் எம்.பிக்களுடன் ஜனாதிபதி இன்று பேச்சு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்ற நிலையில், வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை இன்று (18) சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இதற்கான அழைப்பு ஏற்கெனவே விடுக்கப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பில் வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்களுடன் இரண்டொரு தடவைகள் பேசியிருந்தார். எனினும், ஜனாதிபதியின் செயற்பாடு போலியாக இருப்பதாகவும், இது ஏமாற்றும் செயற்பாடு என்றும் தெரிவித்து, அடுத்தடுத்த சுற்றுக்குச் செல்வதை தமிழ் எம்.பிக்கள் தவிர்த்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தடுப்பூசி ஏற்றப்பட்ட 4 மாத சிசு மரணம்

தடுப்பூசி வழங்கப்பட்டதன் பின்னர் சுகவீனமடைந்ததாக கூறப்பட்ட நான்கு மாதங்களேயான பெண் சிசு, ஞாயிற்றுக்கிழமை (16) உயிரிழந்துள்ளதாக குளியாப்பிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மேல் கொமுகொமுவ பிரதேசத்தில் வசித்து வந்த டபிள்யூ.ஏ. எஸ் நிம்னாதி திஸாநாயக்க என்ற சிசுவே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதன் காரணமாக குளியாபிட்டிய போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2




## தொடர்ந்தும் சரிகிறது இலங்கை ரூபாய்

இலங்கை மத்திய வங்கியால் திங்கட்கிழமை (13) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதத்தின்படி அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி ரணிலுக்கு பாக். பிரதமர் பாராட்டு



சர்வதேச நாணய நிதியத்துடனான நாட்டின் ஒப்பந்தம் தொடர்பாக, பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்ட ஆதரவுக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரீப் பாராட்டியுள்ளார்.

திங்கட்கிழமை (17) இடம்பெற்ற தொலைபேசி உரையாடலின் போதே ஜனாதிபதியின் ஆதரவை பாகிஸ்தான் பிரதமர் பாராட்டியதாக கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

### 2023 அரையாண்டில்

## ரூ. 700 பில்லியன் வரி வருமானம்

2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையான 6 மாத காலப்பகுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் கிட்டதட்ட 700 பில்லியன் ரூபாயை வரி வருமானமாக பெற்றுள்ளது.

திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையில் முதல் ஆறு மாதங்களில் 696,946 மில்லியன் ரூபாய் வரி வருமானமாக பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இது 93 சதவீதம் அதிகமாகும் என்பது திணைக்கள அறிக்கை மூலம் தெரியவருகிறது.

தொடர்ச்சி P2





### குருந்தூர்மலையில்

## வழிபாட்டு உரிமை மறுப்பு குறித்து முறைப்பாடு

*விஜயரத்தினம் சரவணன்*

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதியன்று சைவ வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டமை மற்றும் ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டமை தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் திங்கட்கிழமை (17) முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டது.


தொடர்ச்சி P2

## முட்டை விலை குறித்து வார இறுதிக்குள் முடிவு

முட்டை விலை தொடர்பில், இந்த வார இறுதிக்குள் தீர்மானம் எடுக்கப்படும் என்று வர்த்தக, வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் எம்.பி அத்தபத்து தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனான சந்திப்பின் பின்னர், அமைச்சால் இந்தத் தீர்மானம் எடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



### பெறுபேறுகளுக்கு காத்திருக்கும்

## மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் மாணவர்களுக்கு, தொழிற்பயிற்சி நெறியை ஆரம்பிக்க கல்வி அமைச்சு பரிசீலித்து வருவதாக கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற சிலோன் - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவன விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## உடலில் ஏற்றப்பட்ட குண்டூசிகளுடன் நாடு திரும்பிய பணிப்பெண்

*துவார்கஷான் செ.திவாகரன் டி.சந்ரு*

நு வரெலியா லிந்துலை கிளனிகல்ஸ் தோட்டத்தில் 30 வயதுடைய இளம் தாய் ஒருவர் குடும்ப வறுமை காரணமாகவும் சொந்தமாக வீடு ஒன்றை நிர்மாணிக்கும் கொள்ளும் நோக்கிலும் கொழும்பில் உள்ள முகவர் மூலம் சவுதி நாட்டிக்கு வீட்டுப் பணிப்பெண்ணாக கடந்த ஜூன் மாதம் சென்றுள்ளார்.

குறித்த பெண்ணுக்கு அந் நாட்டு மொழி தெரியாத காரணத்தால் வீட்டு உரிமையாளர் மூலம் கடுமையாக தாக்கி சித்திரவதை செய்யப்பட்ட உடலில் குண்டூசிகள் ஏற்றப்பட்ட நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

தொடர்ச்சி P2

## மணிப்பூர் வன்முறைக்கு மன்னாரில் கவனயீர்ப்பு

*எஸ்.றொசேரியன் லம்பேட்*

வடகிழக்கு இந்தியாவில் உள்ள மணிப்பூர் மாகாணத்தில் அண்மைக்காலமாக கிறிஸ்தவ மதத்தினருக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைக்கு எதிராக, உலக நாடுகள், இந்திய அரசாங்கம் குறித்த விடயத்தில் தலையிட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தும் மன்னாரில் திங்கட்கிழமை (17) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சாணக்கியனை தாக்க முயற்சி; இருவர் மீது துரத்தித் துரத்தி தாக்குதல்

மட்டக்களப்பு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம், போக்குவரத்து அனுமதிப்பதிரம் இன்றி சேவையில் ஈடுபடும் பஸ்களை தடைசெய்ய கோரி, மட்டு. தனியார் பஸ் நிலையத்தில் அனைத்து பஸ்களையும் நிறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் அழைப்பு விடுத்ததையடுத்து அவர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, “பொலன்னறுவையில் உள்ள தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரின், இரு பஸ்களுக்கு ஒரு போக்குவரத்து அனுமதி பத்திரத்திரம் வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

இதில் கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபையில் மட்டக்களப்பில் பொறுப்பாளரராக கடமையற்றி வந்த அரசியல் கட்சி ஒன்றின் உறுப்பினர், கடந்த 8 வருடங்களாக குறித்த பஸ் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கி ஊழல் புரிந்துள்ளதாக குறிப்பிட்டார்.

அந்த பஸ் உரிமையாளரின் பஸ்ஸே மட்டக்களப்பு- வாழைச்சேனை வரையிலான அனுமதி பத்திரத்துடன் பொலன்னறுவை கதுறுவெலவில் இருந்து காத்தான்குடி வரையில் சட்டவிரோதமாக சேவையில் ஈடுபட்டுள்ள போது, மன்னம்பிட்டி விபத்தில் 11 பேர் உயிரிந்துள்ளனர் என்றார்.

இவ்வாறு சட்டவிரோதமாக அனுமதிபத்திரமின்றி போக்குவரத்து சேவையில் ஈடுபட அனுமதி வழங்கிய கிழக்கு மாகாண தனியார் போக்குவரத்து சபை பணிப்பாளர் உட்பட அதிகாரிகள், மன்னம்பிட்டியில் 11 பேரையும் படுகொலை செய்துள்ளனர் என்றார்.

இந்த நிலையில், அங்கு இருந்த இருவர் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நோக்கி, “உண்மைக்கு புறம்பாக பேசவேண்டாம்” என பேசியவாறு தாக்க முற்பட்டனர். எனினும், அங்கிருந்த பஸ்வண்டி உரிமையாளர்கள் மற்றும் ஆர்ப்பாட்டகாரர்கள் ஒன்றிணைந்து, அந்த இருவரையும் அங்கிருந்து துரத்தித் துரத்தி அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதையடுத்து, குழப்ப நிலையை பொலிஸார் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தனர். அதனையடுத்து ஆர்ப்பாட்டகாரார்கள் அங்கிருந்து விலகி சென்றனர்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வாறான அராஜகங்களுக்கு நாங்கள் இடமளிக்க கூடாது. தனிநபர்களுக்காக வக்காளத்து வாங்கி இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தியதை வன்மையாக கண்டிக்கின்றோம். கொல்லப்பட்ட 11 பேரின் நீதி கிடைக்க வேண்டும். இந்தச் சட்டவிரோத அனுமதிப்பத்திரம் வழங்கியமை தொடர்பாக பாராளுமன்றத்தில் பேசுவதுடன் ஜனாதிபதியுடனான இன்றைய (18) சந்திப்பின் போது இந்த விடயத்தை விசேடமாக பேசவுள்ளதாக சாணக்கியன் தெரிவித்தார்.

## தடுப்பூசி ஏற்றப்பட்ட 4 மாத சிசு மரணம்

நான்கு மாதங்களில் வழங்கப்படவேண்டிய தடுப்பூசி கடந்த 15ஆம் திகதி வழங்கப்பட்டுள்ளதாகவும், மறுநாள் 16ஆம் திகதி சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதாக சிசுவின் தந்தை தெரிவித்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரேத பரிசோதனையில் மரணத்துக்கான காரணத்தை கண்டறிய முடியாததால், உடற்பாகங்கள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நிலையில் சிசுவின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டிய தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஜனாதிபதி ரணிலுக்கு பாக். பிரதமர் பாராட்டு



இலங்கை மற்றும் பாகிஸ்தானின் தற்போதைய பொருளாதார நிலைமை குறித்தும் இரு நாட்டு தலைவர்களும் கலந்துரையாடியதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராந்திய அமைதி மற்றும் அபிவிருத்தியை மேம்படுத்துவதில் இலங்கையின் பங்குக்கு பிரதமர் பாராட்டு தெரிவித்தாகவும் உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளும் பொருளாதார நெருக்கடியில் இருந்து மிக விரைவில் வெளிவரும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## விசாரணைக்கு சென்ற கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல்

தீவகம், மண்கும்பான் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் புதன்கிழமை (12) தரம் 4இல் கல்வி கற்கும் மாணவி ஒருவர் மீது, பாடசாலை அதிபர் தாக்கியதாக பெற்றோரால் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் ஞாயிற்றுக்கிழமை (16) குறித்த அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் திங்கள் காலை தீவக கோட்டக் கல்வி அதிகாரிகள் சிலர் பாடசாலையில் விசாரணைகளை மேற்கொள்ள சென்றிருந்த நிலையில், அங்கு கூடி இருந்த பொதுமக்கள் கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவல் அடிப்படையில், பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

### நீதிமன்றத்துக்கும் தேர்தல் ஆணைக்குழுவுக்கும்

## அரசாங்கம் அழுத்தம் கொடுக்கப்போகிறது



அதேபோன்று, மேலான நீதிமன்ற நீதிபதிகள் அரசின் கருத்துகளுக்கு ஏற்ப செயற்படவில்லை என்றால், நீதிமன்ற உத்தரவுகளை அமல்படுத்தவில்லை என்றால் மேலான நீதிபதிகளை தெரிவுக்குழு முன் கொண்டுவந்து அழுத்தம் கொடுக்கவும் முடியும் என்பதை இது தெளிவாக உணர்த்துவதாக குறிப்பிட்டார்.

இந்த அரசியல் சூதாட்டதை, இந்த அரசியல் சூனியத்தை நடைமுறைப்படுத்தி, வங்குரோத்தடைந்த நாட்டில் முறைமை மாற்றம் ஏற்படும் என அனைவரும் பேசிக் கொண்டிருக்கும் வேளையில், காலாவதியான மக்கள் வெறுத்த பழைய முறைமையையே இந்தத் தெரிவுக் குழுவின் ஊடாக, தொடர்ந்தும் நடக்கும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

உண்மையில், இந்த அரசாங்கம் அதன் நடவடிக்கைகளின் மூலம் மக்களின் இறையாண்மையையும் சர்வஜன வாக்குரிமையையும் மக்களுக்கு மறுத்து, அழித்து வருவதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறல் என்ற தொனிப்பொருளில் அரசாங்கம், நீதிமன்றத்திற்கும் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அழுத்தம் கொடுக்கப் போவதாகவும் தெரிவித்தார்.

## தொடர்ந்தும் சரிகிறது இலங்கை ரூபாய்

நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை 313 ரூபாய் 29 சதமாகவும் விற்பனை விலை 327 ரூபாய் 16 சதமாகவும் பதிவாகியுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை (14) இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணய மாற்று விகிதத்துக்கு அமைய, டொலரொன்றின் கொள்வனவு விலை 310 ரூபாய் 49 சதமாகவும், விற்பனை விலை 324 ரூபாய் 67 சதமாகவும் பதிவாகியிருந்தது

வியாழக்கிழமையன்று (13) அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 308 ரூபாய் 16 சதமாகவும் அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை விலை 321 ரூபாய் 87 சதமாகவும் பதிவாகியிருந்தது.

இலங்கை ரூபாய்க்கு நிகரான ஐக்கிய அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை கடந்த 2022 ஏப்ரல் மாதத்தில் 300 ரூபாயை விட குறைவடைந்திருந்தது.

இந்நிலையில், மே 18ஆம் திகதி அதன் கொள்வனவு விலை 299 ரூபாய் 21 சதமாகவும் விற்பனை விலை 312 ரூபாய் 37 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மாணவர்களுக்கு தொழிற்பயிற்சி

பரீட்சை முடிவடைந்து பெறுபேறுகள் அறிவிக்கப்படும் வரையான மூன்று மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் தொழிற்பயிற்சித் திட்டம் வழங்கப்படும் என்றார்.

மாணவர்கள் கற்கும் பாடசாலைகளிலேயே பாடநெறியை நடத்துவதற்கு கல்வி அமைச்சு எதிர்பார்த்துள்ளது என்றும் சர்வதேச சந்தையில் தொழிலாளர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, பாடசாலை மட்டத்தில் ஒரு பயிற்சி திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று கூறினார்.

மேலும், பத்து புதிய பாடசாலைகளுக்கு உள்கட்டமைப்பு வசதிகள், ஃபைபர் ஒப்டிக் இணைப்பு, ஆயிரக்கணக்கான புதிய பாடசாலைகளுக்கு புதிய தகவல் தொடர்பு வசதி, தேவையான மின் வசதிகள் ஆகியவற்றை வழங்க பாடுபட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

## வழிபாட்டு உரிமை மறுப்பு குறித்து முறைப்பாடு

முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூகசெயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன் ஆகியோரால் வவுனியாவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்தியக் காரியாலயத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, குருந்தூர்மலையில் கடந்த 14ஆம் திகதி வெள்ளிக் கிழமையன்று, பிரதோச தினத்தில் சைவத் தமிழ் மக்கள் சிலர் விசேட பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளச் சென்றபோது, பெரும்பான்மை இனத்தவர்களாலும் பௌத்த துறவிகளாலும் குழப்பம் விளைவிக்கப்பட்டது.

மேலும், பொங்கலுக்காக அங்கு தீமூட்டப்பட்டபோது, பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவராலும், பெரும்பான்மை இனத்தவர் ஒருவராலும் சப்பாத்துக்கால்களால் மிதிக்கப்பட்டு அணைக்கப்பட்டது.

அத்தோடு வழிபாடுகளை மேற்கொள்ள வருகைதந்த மக்களும் மக்கள் பிரதிநிதிகள் சிலரும், சமூகசெயற்பாட்டாளர்களும் பொலிஸாரால் தாக்கப்பட்டும் இருந்தனர்.

இந்நிலையில் குறித்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், அங்கு சைவ வழிபாட்டு உரிமையைத் தடுக்கும் வகையில் செயற்பட்ட பௌத்த தேரர்களுக்கும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் ஆதரவாகச் செயற்பட்டிருந்ததுடன், சைவ வழிபாட்டுரிமைகளைத் தடுக்கின்ற செயற்பாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

அத்தோடு குறித்த நாளில் குருந்தூர்மலையில் செய்தி சேகரிப்பில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர் விஜயரத்தினம் சரவணன், பொலிஸாரால் தள்ளிவிடப்பட்டு அச்சுறுத்தலுக்குஉ உள்ளாகியிருந்தார்.

குறிப்பாக, சைவ வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டமை மற்றும், ஊடக அடக்குமுறை என்பவற்றில் ஈடுபட்ட பொலிஸ் அதிகாரிகள், பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு எதிராகவே முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முட்டை விலை குறித்து வார இறுதிக்குள் முடிவு

அநியாயமான வியாபாரம் நடைபெறுவதால் முட்டை விலையை உடனடியாக கட்டுப்படுத்த வேண்டும் என்றும் தெரிவித்தார்.

சில சமயங்களில் முட்டை விலை 60 ரூபாய்க்கு மேல் உயர்ந்து வருகிறது என்றும் அதை 50 ரூபாயைவிட குறைக்கும் வகையிலேயே தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.



## ரூ. 700 பில்லியன் வரி வருமானம்

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துக்கு 2022ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 361.8 பில்லியன் ரூபாய் வரி வருமானம் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் கம்பனிகள் மற்றும் கம்பனிகள் அல்லாத நிறுவனங்களிடமிருந்து 243.8 பில்லியன் ரூபாய் வரி வருவானம் ஈட்டப்பட்டுள்ளதுடன், முதல் 6 மாதங்களில் சூதாட்டத்தினூடாக திரட்டப்பட்ட வரி வருமானம் 2.5 பில்லியன் ரூபாயாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

வரிக் கொள்கை திருத்தம், பொருளாதாரத்தை வலுப்படுத்துதல் மற்றும் வரி வசூல் முறைகளில் முன்னேற்றம் ஆகியவை வருமான அதிகரிப்புக்குக் காரணம் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

## உடலில் ஏற்றப்பட்ட குண்டூசிகளுடன் நாடு திரும்பிய பணிப்பெண்

இந்நிலையில் சவுதியில் தொழில் வழங்கிய வீட்டு உரிமையாளரின் மனைவி குறித்த பெண், தான் குளிப்பதற்காக குளியலறைக்கு சென்று குளித்துவிட்டு வரும்போது குறித்த வீட்டின் எஜமானி இவரை கடுமையாக தாக்கிய குண்டு ஊசிகளை உடம்பு முழுவதிலும் பலவந்தமாக குத்தி சித்திரவதை செய்யப்பட்டதாக தனது கணவனுக்கு குரல் பதிவு ஊடாக அனுப்பிவைத்துள்ளார்.

கணவன் மற்றும் அவரின் உறவினர்கள் வெளிநாட்டுக்கு அனுப்பி வைத்த முகவர் மற்றும் உபமுகவர் இருவரிடமும் இச்சம்பவம் தொடர்பாக பல முறை தெரிவித்த போதிலும். பணம் கொடுத்தால் மீண்டும் நாட்டிற்கு எடுத்து தருவதாகவும் உபதரகர் அச்சுறுத்தியதாக கணவன் தெரிவிக்கின்றார்.

சவுதி நாட்டில் உள்ள வெளிநாட்டு பணியகத்திற்கு தெரிந்தவர் ஒருவரின் உதவியுடன் குறித்த பெண் இலங்கைக்கு கடும் உடல் சுகயீனமுற்ற நிலையில் வந்ததால் உறவினர்களால் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில் வைத்தியர்கள் பரிசோதனை செய்தபோது உடம்பில் அதிகமான குண்டு ஊசிகள் இருப்பது தெரிய வந்துள்ளது.உடம்பில் இருந்து இதுவரை நான்கு குண்டு ஊசிகள் அகற்றப்பட்டுள்ளதுடன் இன்னும் நான்கு ஊசிகள் உடம்பில் இருப்பதுடன் இதனை அகற்ற வைத்தியர்களால் திகதியும் வழங்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பெண் கூறுகையில் “எங்களுக்கு வீடு இல்லை. வெளிநாடு சென்றால் வீடு ஒன்றை அமைத்துக்கொள்ள முடியும் என்ற எண்ணத்துடன் சென்றேன் என்னை லிந்துலை கேம்பிரி தோட்டத்தில் இருக்கின்ற தரகர் எனது வீட்டுக்கு வருகைதந்து கணவருடன் பேசிய பின்பு கொழும்பில் உள்ள தரகர் மூலம் அனுப்பிவைத்தனர் என்றார்.

## மணிப்பூர் வன்முறைக்கு மன்னாரில் கவனயீர்ப்பு

மன்னார் நகர் சுற்றுவட்ட பகுதியில் மன்னார் கிறிஸ்தவ மதத்தை சேர்ந்தவர்கள் இணைந்து பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு குறித்த போராட்டத்தில் ஈடுபட்டனர்.

‘சிறுபான்மை இனங்களை துன்புறுத்தும் தீவிரவாத அமைப்புகளை உடனே தடை செய்’, ‘உடைக்கப்பட்ட எரிக்கப்பட்ட வீடுகள், ஆலயங்களை உடனே புனரமைப்பு செய்து கொடு’, ‘சர்வதேசமே இந்திய கிறிஸ்தவர்களை உடனே கவனி’, ‘பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி விசாரணை உடனே செய்’ போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை அரசாங்கமும் சர்வதேசமும் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களுக்கு ஆதரவாக பேச வேண்டும் என்றும் இந்திய மத்திய அரசு இந்தக் கலவரத்துக்கு காரணமான தீவிரவாத அமைப்புகளை கட்டுப்படுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பறிபோய்க் கொண்டிருக்கும்

# தமிழர்களின் அடையாளங்களை பாதுகாக்க வேண்டியது அவசியம்

நிதர்சன் வினோத்

தமிழர்களின் வரலாற்று அடையாளச் சின்னங்கள் பறிபோய்க் கொண்டிருக்கின்ற சூழலில், அவற்றைப் பாதுகாக்க வேண்டியது அவசியமென வலியுறுத்தியுள்ள சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், தவறினால் வரலாறுகள் புனையப்பட்டு அழிக்கப்படும் நிலைமை ஏற்படுமெனவும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் (16) நடைபெற்றபோது, நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: நல்லூர் இராசதானியின் சங்கிலியன் தோரண வாசல் புனரமைக்கப்பட்டது போன்று ஏனைய வரலாற்று மரபுரிமைச் சின்னங்களும் புனரமைக்கப்பட்டு, அவை அனைத்தும் பாதுகாக்கப்பட வேண்டும்.

குறிப்பாக இங்குள்ள மந்திரி மனையை அடையாளப்படுத்தி, காப்பாற்றுவது போன்று ஏனைய வரலாற்று அடையாளச் சின்னங்களையும் அடையாளப்படுத்த வேண்டும். இன்றைக்கு தமிழர்களின் அடையாளச் சின்னங்கள் எல்லாம் பறிபோகின்றன. எனவே, வரலாற்று அடையாளங்களை நாங்கள் சரியாக பேணாவிட்டால், கதை புனைந்து அழிக்க நெருங்கி விடுவார்கள்.

இவ்வாறு எமது பாரம்பரிய வரலாற்று, அடையாளச் சின்னங்களை, பாதுகாக்க யாழ். பல்கலைக்கழக சமூகம் காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். எங்கள் அடையாளச் சின்னங்கள் எங்கிருந்தாலும் கல்வெட்டுகள் போடுங்கள். அதைவிடுத்து, எதுவும் இல்லாமல் அது இது என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

மேலும், எங்கள் பாரம்பரிய அடையாளங்களை சொல்வதற்கு, எம்மவர்களிடத்தே பொறுமை இல்லை. அந்தப் பொறுமையை அனைவரும் வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் மேலும் தெரிவித்தார்.

## உகந்தைமலை கொடியேற்றம் இன்று



வி.ரி சகாதேவராஜா

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் கோவில் வருடாந்த ஆடி வேல் விழா உற்சவம் இன்று (18) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. கோவில் பிரதம குரு சிவஸ்ரீ க.கு சீதாராம் குருக்கள் தலைமையில் திருவிழா சிறப்பாக நடைபெறவுள்ளது.

ஆடிவேல் விழா உற்சவம் தொடர்ந்து 13 நாள்கள் நடைபெற்று, ஓகஸ்ட் 02ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் நிறைவடையை இருப்பதாக கோவில் பரிபாலன சபை வண்ணக்கர் டி.எம் சுதுநிலமே திஸாநாயக்க தெரிவித்தார். வழக்கம்போல, அன்னதானம் மற்றும் பஸ் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தன்னுயிரை மாய்க்க முயன்ற நபர் காப்பாற்றப்பட்டார்

நிதர்ஷன் வினோத்

யாழ். அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள காணியில் தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற நபரை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

தனது மகள் குறித்து அயல் வீட்டார் இழிவாக பேசியது தொடர்பாக, பொலிஸார் நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டதாக தெரிவித்து, அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள காணியில் தனக்கு தானே பெற்றோலை ஊற்றி தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளார்.

விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த நபரை மடக்கிப்பிடித்து காப்பாற்றியுள்ளனர். ஆவரங்கால், சர்வோதயா பகுதியை சேர்ந்த நபரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கடந்த ஒரு வாரத்துக்கு முன், சர்வோதயா பகுதியில் 18 வயது இளைஞன் ஒருவன், அயல் வீட்டுப் பெண்ணை காதலித்து, இருவரும் சுய விருப்பில் திருமணம் செய்ய சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து, பெண் வீட்டார் மேற்படி இளைஞனின் வீட்டுக்கு சென்று தாக்குதலை மேற்கொண்டு, சொத்துகளுக்கும் சேதம் ஏற்படுத்தியிருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனின் வீட்டார், அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய, பெண்ணின் தந்தை மற்றும் பெரிய தந்தை ஆகியோர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 5 சந்தேகநபர்களை கைது செய்யவும் பொலிஸாருக்கு நீதிமன்றம் உத்தரவு வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் குறித்த 5 சந்தேக நபர்களையும் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு பொலிஸார் அறிவித்துள்ள நிலையில், தவறு செய்யாத தாம் ஏன் முன்னிலையாக வேண்டும்? தனது மகளை அவதூறாக பேசிய அயல் வீட்டார் மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கூறியே இவ்வாறு முயன்றதை அடுத்தே இந்தச் சம்பவத்தால் அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் பரபரப்பான நிலையேற்பட்டது.

## மதுபானசாலைகள் அமைப்பதை நிறுத்துமாறு ஆர்ப்பாட்டம்

வா. கிருஸ்ணா



மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில், மூன்று மதுபானசாலைகள் அமைப்பதற்கு முன்னெடுக்கப்படும் முயற்சியை நிறுத்துமாறு வலியுறுத்தி, நேற்று (17) அடையாள ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை தமிழரக் கட்சியின் வவுணதீவு கிளையின் ஏற்பாட்டில், பிரதேச செயலகத்துக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் இரா. சாணக்கியன் எம்.பி கலந்துகொண்டார். மேலும், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், மட்டக்களப்பு மாநகர சபையின் முன்னாள் மேயர் தி.சரவணபவன், மண்முனை மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, மதுபானசாலைக்கு எதிராக கோசங்கள் எழுப்பட்டதுடன் மதுபானசாலை அமைக்கும் எண்ணத்தை கைவிடவேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி சுபா சதாகரன், ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுடன் கலந்துரையாடியதுடன் மக்கள் எதிர்ப்புகள் இருந்தால் இவ்வாறான விடயங்களுக்கு அனுமதி வழங்கப்படாது எனவும் தெரிவித்தார்.

## எட்டு பஸ்களுக்கு போக்குவரத்துத் தடை



ரஞ்சித் ராஜபக்ஷ

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு தகுதியில்லாத தனியார் பஸ்கள் 7க்கும், இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்றுக்கும் போக்குவரத்து தடை விதிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்ட மோட்டார் வாகன பரிசோதகர்கள், ஹட்டன் பொலிஸாருடன் இணைந்து சுமார் 48 பஸ்களை திங்கட்கிழமை (17) பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

நாவலப்பிட்டி - கினிகத்ஹேன வழிதடத்தில் பயணித்த 7 பஸ்களும், நாவலப்பிட்டி இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்ஸொன்றும், போக்குவரத்தில் ஈடுபடுவதற்கு உகந்தது அல்லவென கண்டறியப்பட்டது.

குறைப்பாடுகளை சீர்செய்து, மோட்டார் வாகன பரிசோதகர்களின் கண்காணிப்புக்கு 14 நாள்களுக்குள் உட்படுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளதுடன். அதுவரையிலும் அந்த பஸ்களுக்கு போக்குவரத்துத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

## கனேடிய உயர்ஸ்தானிகர் சிறீதரன் எம்.பி சந்திப்பு

நிதர்சன் வினோத்



இலங்கைக்கான கனடிய தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸூக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று (17) பாராளுமன்ற உறுப்பினரின் யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்றது.

இச்சந்திப்பில், ஈழத்தமிழர்கள் நலன்சார் செயற்பாடுகளிலும், இன அழிப்புக்கான நீதிகோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருவதற்கு தனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில், அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் பெண்களின் அரசியல் வகிபாகம் மிகக்குறைந்தளவில் காணப்படுவதன் காரணம் குறித்தும், அதன் யதார்த்த நிலைப் பின்னணிகள், குடும்ப மற்றும் சமூகச் சூழல் என்பவை குறித்தும் கனடிய உயர்ஸ்தானிகர், பாராளுமன்ற உறுப்பினரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அதேவேளை, போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374.8 ஏக்கர் காணிகள் தொடர்பான விவரமும், 2009க்குப் பின்னர் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அடாத்தாக அபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்த விவரண அறிக்கையும் கனடிய உயர்ஸ்தானிகரிடம் கையளிக்கப்பட்டது.

## வித்தியாலயத்தில் கொலைக்களம்: நால்வருக்கும் விளக்கமறியல்

பாலித ஆரியவங்ச

பதுளை நகரிலுள்ள அராபி வித்தியாலயத்துக்குள் சட்டவிரோதமான முறையில் நடத்திச் செல்லப்பட்ட கொலைக்களம் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கிருந்த நால்வர் ஞாயிற்றுக்கிழமை (16) கைது செய்யப்பட்டனர்.

பதுளை பொலிஸ் பிரிவில் விஷ போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட நால்வரும் பதுளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரையும் எதிர்வரும் 18ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் ஹேமிந்த தயாவங்ச உத்தரவிட்டுள்ளார்.

அந்த வித்தியாலயத்துக்குள் உள்ளேயே, இரவு வேளையில் மாடுகளை அறுத்தல், அனுமதிப்பத்திரமின்றி கொலைகளத்தை முன்னெடுத்தல், கன்று குட்டியொன்றை அறுப்பதற்கு தயாராகியமை ஆகிய குற்றச்சாட்டுகள் இந்த நால்வருக்கு எதிராகவும் சுமத்தப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை (17) அதிகாலைவேளையில் பொலிஸார் சுற்றிவளைத்த போது, அங்கு மூன்று மாடுகள் அறுக்கப்பட்டிருந்தமையும், கன்றுக் குட்டியொன்றை அறுக்க தயாராகி கொண்டிருந்தமையும் கண்டறியப்பட்டது.

### சுழிபுரம் பிரதான தபாலகத்தில்

## இரண்டாம் மொழிக்கற்கை அங்குரார்பனம்

நிதர்சன் வினோத்



இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கூட்டுறவு சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ், இரண்டாம் மொழிக்கற்கை நேற்று (17) சுழிபுரம் பிரதான தபாலகத்தில் இலங்கை அஞ்சல் மாஅதிபர் றுவான் சத்குமாரவால் அங்குரார்பனம் செய்து வைக்கப்பட்டது.

மாணவர்களிடையே இரண்டாம் மொழியான சிங்களம் மற்றும் ஆங்கில கற்கைநெறிகளை வளர்தெடுக்கும் முகமாக குறித்த செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்பொழுது அஞ்சல்மா அதிபர் (செயற்பாடுகள்) ராஜித கே ரணசிசிங்க, வடக்கு அஞ்சல் மாஅதிபதி திருமதி மதுமதி வசந்தகுமாரி, யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஏ.டி பெர்னாண்டோ, முத்திரை பணியக பணிப்பாளர் லங்காதி சில்வா, நுண்ணாய்வு பரிசோதகர் கே. செந்தில்குமார், சுழிபுரம் தபாலக அதிபர், உத்தியோகத்தர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வடக்கு ரயில் நேர அடடைவணையில் மாற்றம்



செந்தூரன் பிரதீபன்

யாழ். - கொழும்பு கோட்டைக்கு இடையில் இடம்பெறும் ரயில் சேவை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என யாழ்ப்பாணம் ரயில் நிலைய அத்தியட்சகர் தேவராஜசர்மா சுரேந்திரன் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், கல்கிசையில் இருந்து காலை 5.10க்கு புறப்படும் யாழ்தேவி ரயில், கோட்டையை 5.45க்கு வந்தடைந்து, மதியம் 12.55க்கு யாழ். ரயில் நிலையத்தையும் 1.15க்கு காங்கேசன்துறை ரயில் நிலையத்தையும் சென்றடையும்.

இதே யாழ்தேவி, 1.40க்கு கே.கே.எஸ் இல் இருந்து புறப்பட்டு, 2.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்தையும் இரவு 9.20க்கும் கோட்டையை சென்றடையும்.

கொழும்பில் இருந்து நண்பகல் 11.50க்கு புறப்படும் உத்தரதேவி, மாலை 6.45க்கு யாழ்ப்பாணத்தையும் காங்கேசன்துறையை 7.37க்கு சென்டையும்.

தபால் ரயில் இரவு 7.00 மணிக்கு கே.கே. எஸ் இல் இருந்து புறப்பட்டு, வந்தடைந்து 7.40க்கு யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு அதிகாலை 4 மணிக்கு கொழும்பு கோட்டையை சென்றடையும்.

இரவு தபால் ரயில் கொழும்பிலிருந்து இரவு 8 மணிக்கு புறப்பட்டு, யாழ்ப்பாணத்தை அதிகாலை 3. 50க்கு வந்தடையும்.

பழைய ரயில் தண்டவாளங்களை எடுத்து செல்வதற்காகவே இந்த ரயில் நேர அட்டவணையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் வெகு விரைவில் பழைய ரயில் நேர அட்டவணைக்கு ஏற்ற வகையில் ரயில்கள் சேவையில் ஈடுபடும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பாவனைக்கு உதவாத இனிப்பு பண்டங்களை விற்றவருக்கு சிக்கல்

ஷேன் செனவிரத்ன



சிறார்களின் மனங்களை கவரும் வகையில், கண்டி நகரில் ஒரு பெரிய காட்சியறையை நடத்தி, மனித பாவனைக்கு உதவாத, காலவதியான இனிப்புப் பண்டங்களை விற்பனை செய்தவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

டொபி, சொக்கலேட் உள்ளிட்ட இனிப்புப் பண்டங்களை மோசடியான முறையில் விற்பனை செய்யப்பட்ட விற்பனை நிலையம், கண்டி மாநகர சபையின் சுகாதார பிரிவினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

அதன்போது, வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட அந்த இனிப்பு பண்டங்களில், உற்பத்தித் திகதி மறைக்கப்பட்டு, காலவதியான திகதி மாற்றப்பட்டு, விற்பனை செய்யப்பட்டமை கண்டறியப்பட்டது.

அதன்பின்னர், அந்த வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் கடுமையாக எச்சரிக்கப்பட்டார். அவருக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

### குதிரைகளும் கால்நடைகளும்

## நெடுந்தீவில் குடிநீர் இன்றி இறக்கும் நிலைமை

சுப்பிரமணியம் பாஸ்கரன்



நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள குதிரைகள், கால்நடைகளுக்கு குடிநீர் இல்லாத நிலை காணப்படுவதாகவும் இதனால் நீண்ட தூரம் குடிநீருக்காக அலைந்து இறக்கின்ற நிலைமை காணப்படுவதாகவும் பிரதேச பொது அமைப்புகளால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நெடுந்தீவு பிரதேசத்தின் அடையாளமாக விளங்கும் குதிரைகள், கால்நடைகளுக்கான கேணிகளில் நீர் வற்றிக் காணப்படுவதுடன் குறித்த பிரதேசங்களில் உள்ள கேணிகள் துப்புரவு செய்யப்படாமலும் காணப்படுகின்றன. இவ்வாறான கேணிகளில் தற்போது இருக்கின்ற நீரில், உப்புச்செறிவு அதிக அளவில் காணப்படுவதால் அந்த நீரைப் பருகும் மிருகங்கள் உயிரிழந்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஏற்கெனவே, குதிரைகளுக்கு நீர் விநியோகம் செய்வதற்குரிய சகல வசதிகள் இருந்தும், அவை இதுவரை செய்யப்படவில்லை என்றும் இந்த விடயம் உடனடியாக கவனத்தில் கொள்ளப்பட்டு, எதிர்வரும் நாள்களில் கேணிகள் ஊடாக கால்நடைகள் மற்றும் குதிரைகளுக்கான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று நெடுந்தீவு பிரதேச செயலாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நீண்டகால பொருளாதார இலக்குகளும் சுருங்கும் வாழ்க்கை முறையும்

படுபாதாளத்தில் விழுந்துகிடந்த பொருளாதாரம், ஓரளவுக்கு தூக்கி நிறுத்தப்பட்டுள்ளது என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. மக்கள் ஓரளவுக்கு நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். எனினும், அவ்வப்போது அமல்படுத்தப்படும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளால், மக்களின் வாழ்க்கையில் நிம்மதியும் மகிழ்ச்சியும் கலைந்து செல்கிறது; வாழ்க்கை மீதான அழுத்தம் அதிகரித்துச் செல்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்றும் போது, மக்கள் மீதான சுமைகளும் அதிகரிக்க வைக்கப்படுகின்றன. அத்துடன், இதர வருமானங்களைத் திரட்டும் பாதைகளும் சுருங்கிக்கொண்டே செல்கின்றன. இவை சாதாரண குடும்பங்களை கொண்டு நடத்துவதில் கடுமையான தாக்கத்தை செலுத்தும். தொழில்களும் தொழில்வாய்ப்புகளும் இல்லாமல் செய்யப்படுகின்றன.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் 33 நிபந்தனைகள் ஜூன் மாத இறுதிக்குள் நிறைவேற்றப்பட்டுள்ளன. எட்டு நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது என 'வெரிட்டே ரிசர்ச்' நிறுவனத்தின் ஆய்வு மூலமாக கண்டறியப்பட்டுள்ளது.

மீதமிருக்கும் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அவற்றால் சாதாரண மக்கள் எவ்வாறான பாதிப்புகளுக்கு உள்ளாகுவார்கள் என்பதற்கு காலம்தான் பதில் சொல்லவேண்டும். தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரான விஜித ஹேரத்தின் கூற்றின் பிரகாரம், 12 மணி நேர வேலை சட்டம் தயாராகி வருகின்றது. அதுவும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளில் ஒன்றாகுமென குறிப்பிட்டுள்ளார்.

ஆக, மேலதிக நேர கொடுப்பனவு முறைமையை முழுமையாக இரத்துச் செய்யும் வகையிலேயே இந்தச் சட்டம் அமைய இருக்கின்றது. சாதாரண மனிதனுக்கு 8 மணிநேரத்துக்கு மேல் வேலைச் செய்வதற்கான பலம் இருக்காது. எனினும், சொற்ப சம்பளத்துக்கு மேலே ஏதாவது உழைக்கவேண்டுமென கருதியே மேலதிக வேலையைச் செய்வர். அதற்கும் ஆப்பு வைக்கப்படுகின்றது.

நாளொன்றுக்கு 12 மணிநேர வேலை எனும் சட்டம் அமல்படுத்தப்படால், நாளொன்றுக்கு இரண்டு வேலை செய்வோர், மேலதிக கொடுப்பனவுகளை எதிர்பார்த்து எட்டுமணிநேரத்துக்கு மேல் பணியாற்றுவோர் போன்றோர் கடுமையாக பாதிக்கப்படுவர். பணிக்குப்பின்னர் சுயதொழில் செய்வோரின் வருமான பாதையும் மூடப்படுகின்றது.

இதற்கிடையில், அரச நிறுவனங்களில் தொழில் குறைப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. அலுவலக உதவியாளர், தேநீர் தயாரிப்பாளர் என்போரை நீக்கிவிட்டு, பல்துறை ஊழியர் எனும் திட்டம் வகுக்கப்படுகின்றது. சாரதிகளின் எண்ணிக்கையை குறைக்கவும், 45 வயதுக்கு மேற்பட்டவர்களை சாதாரண தொழில்நிலைகளில் இருந்து நீக்குவதற்கும், நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 2048 ஆம் ஆண்டை, தன்னிறைவு அடைந்த பொருளாதார இலக்காகக் கொண்டு ஓடிக்கொண்டிருக்கின்றார். மக்கள் தங்களுடைய வாழ்க்கை முறைமையை சுருக்கிக்கொண்டு ஓடுகின்றனர். மேலதிக வருமான பாதைகளை எல்லாம் அடைத்துவிட்டால், சாதாரண மக்களால் தலையைத் தூக்கவே முடியாது என்பதை கவனத்தில் எடுத்து தீர்மானங்களை எடுப்பதே சிறந்தது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்கள் நெஞ்சத்தை நீங்களே உடைத்து, உங்களை குற்றவாளி ஆக்கவேண்டாம். தேவையற்று எதற்கும் சலனப்பட்டு கலங்குவது நிறுத்தப்பட வேண்டும். துணிச்சல் இன்றேல் வாழ்வில் இனிமை துலங்காது.

பிறர் கூறும் கடுஞ்சொற்களைக் காதுகொடுத்துக் கேட்டலாகாது. இத்தகையவர்கள் வேண்டுமென்றே மனதைக் கலைத்துவிடும் செய்திகளைச் சொல்வதுண்டு.

மேலும் குடும்பத்தில் கோபத்தைக் காட்டலாகாது. நிதிப்பிரச்சினை, அலுவலகப் பிரச்சினை எனப் பலதரப்பட்ட அழுத்தங்களை அநேகர் அனுபவித்து வருவதுண்டு.

எந்தப் பாரிய பிரச்சினைகளையும் உடைக்க முடியும். திட்டமிட்டு கருமங்களை ஆற்றுக! உங்களுக்கு நீங்களே எஜமானன். மறக்க வேண்டாம்!

உங்களுக்கு எனப் பல கடமைகள் உண்டு. அவை பாரமானவை என எண்ணினால், சின்ன விடயங்களும் பெரும் பாரமாகி விடும்.

எப்பொழுதும் மனதை இலேசாக்கி, அனைவரிடமும் சகஜமாகப் பழகினால், அழுத்தங்கள் குறைந்துவிடும். வாழ்க்கையை இரசித்தால் நிம்மதி நிச்சயம்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மஸ்கெலியா – நல்லதண்ணி

### நெடுஞ்சாலையின் அவலநிலை

நாளாந்தம் பல பஸ் சேவைகள் இடம்பெற்று வரும் மஸ்கெலியா - நல்லதண்ணி, மஸ்கெலியா - மரே பிரதான வீதியில், பாரிய அளவில் குன்றும் குழியுமாக உள்ளதால் பயணிகள், கர்ப்பிணி தாய்மார்கள், நோயாளிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக புகார் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி, நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தானது. சிவனடி பாத மலை கடந்த பருவ காலங்களில் கூட, இந்த வீதி செப்பனிடப்படவில்லை.

வீதியை அபிவிருத்தி செய்யும் முகமாக, நல்லதண்ணி நெடுஞ்சாலையில், 2020இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்வந்து, லக்க்ஷபான தோட்டப் பகுதியில், வீதி ஓரமாக இயந்திரங்களை நிறுத்திவிட்டு சென்று, வருடங்கள் பல சென்ற போதும், அந்த இயந்திரங்கள் துருப் பிடித்து உக்கும் நிலை உருவாகி வருகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி, இவ் வீதியை அபிவிருத்தி செய்ய வேண்டும் என சாரதிகள், பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

செ.தி பெருமாள்



முஸ்லிம் சமூகம்:

# அழக் கூட முயலாத குழந்தை

மொஹமட் பாதுஷா

'அழுத பிள்ளைதான் பால் குடிக்கும்' என்பார்கள். ஒரு தாயின் ஒவ்வொரு பிள்ளைக்கும், பால் குடிப்பதற்கான தார்மிக உரிமை உள்ளது என்றாலும், பிள்ளைகள் பசியுடன் இருப்பதை தாயும் வீட்டில் இருப்பவர்களும் தெரிந்து கொள்வதற்கு, பிள்ளையிடம் இருந்து முயற்சி வெளிப்பட வேண்டி இருக்கின்றது.

இந்த உவமானம், அரசியல் உள்ளிட்ட எல்லா விவகாரங்களுக்கும் பொருந்தும். குறிப்பாக, முஸ்லிம் சமூகத்தின் விடயங்களை முன்கொண்டு செல்வதில், முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஏனைய சமூகக் கட்டமைப்புக்களும், கிட்டத்தட்ட அழாத, அழக் கூட முயலாத அல்லது, அதற்கு நல்லநேரம் பார்த்துக் காத்திருக்கின்ற ஒரு குழந்தை போலவே, காலத்தைக் கடத்திக் கொண்டிருப்பதாகச் சொல்லலாம்.

இலங்கை சூழலில், பெரும்பான்மைச் சமூகம் தமது நலன்களை உறுதி செய்வதிலும் முதன்மைச் சமூகமாக தன்னை நிலைநிறுத்துவதற்கு அவசியமான மேலாதிக்கத்தை பிரயோகிப்பதிலும், கண்ணும் கருத்துமாக இருந்து வருவதை காண்கின்றோம். இதை நேரடியாக, அரசாங்கமோ அல்லது வேறு தரப்போ செய்து வருகின்றது.

அதேபோல், தமிழர்கள் தமக்கான உரிமைகளை உறுதி செய்வதற்காக தொடர்ச்சியாக பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆயுதப் போர் முடிவடைந்த பிறகு, அவர்களது போராட்டம் வேறு பரிணாமத்தை எடுத்திருப்பதாகச் சொல்லலாம். இந்த முன்னெடுப்புகளுக்கு தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமன்றி, அச்சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தரப்பும் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றது.

ஆனால், இவ்வாறான ஒரு நிலைமை, முஸ்லிம் சமூகத்தில் இல்லை என்பதுதான் கசப்பான, கவலையான உண்மையாகும்.

அதாவது, முஸ்லிம் சமூகம் தமது உரிமைகளை வென்றெடுப்பதிலும் பிரச்சினைகளை தீர்ப்பதிலும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இனப்பிரச்சினை போன்ற விடயங்களில் தமக்கான பங்கை உறுதிப்படுத்துவதிலும் காத்திரமான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவில்லை. குறைந்தபட்சம், அழக்கூட விருப்பமில்லாத ஓர் இனக் குழுமமாக காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றது.

இது பற்றி, இப்பக்கத்தில் வெளியான பல பத்திகளில் நிறையவே எழுதியும் பேசியும் விட்டோம். ஆனால், முஸ்லிம் அரசியல்வாதிகள் மட்டுமன்றி, பொறுப்புவாய்ந்த தரப்பினர்கள் எல்லோரும், இந்த விடயத்தில் முன்னேறியதற்கான எந்த அறிகுறியும் தெரியவில்லை. இது, முஸ்லிம் சமூகத்துக்கு நீண்டகால ரீதியில் பெரும் இழப்பைக் கொண்டு வரப் போகின்றது.

தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொள்கின்ற அனைத்து நடவடிக்கைகளும், ஒரு பல்லின நாட்டுக்கு பொருத்தமானது என்று கூறிவிட முடியாது. அதேபோன்று, அவர்களது கோரிக்கைகள், நிபந்தனைகள் கூட, முற்றுமுழுதாக நடைமுறைச் சாத்தியமானவை என வரையறுப்பதும் கடினமானது. ஆனால், இங்கு ஒரு விடயம் முக்கியமானது,

அதாவது, ஆயுத ரீதியாக புலிகள் தோற்கடிக்கப்பட்ட பிறகும், தமிழ் அரசியல்வாதிகளின் தலைமையில் தமிழ்ச் சமூகம், தனது உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காக ஏதோ ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில், தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக்கின்றது என்பதே அவ்விடயமாகும்.

தமிழ் அரசியல்வாதிகள் மாத்திரமன்றி, தமிழ் சமூகத்தில் உள்ள புத்திஜீவிகள், அவதானிகள், பல்கலைக்கழக சமூகங்கள், செயற்பாட்டாளர்கள், புலம்பெயர் சமூகம் என்பன இதில் சரிசமமான பங்கை ஆற்றுவதாகக் குறிப்பிடலாம். இந்த அடிப்படையில் நோக்கினால், முஸ்லிம் சமூகம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றது.

முஸ்லிம் அரசியல் தலைவர்கள், எம்.பிக்கள் உள்ளிட்ட அரசியல்வாதிகளின் சமூக உணர்வு எல்லாம் பெரும்பாலும், ஒரு தேர்தல் அறிவிக்கப்படும் போது விழித்தெழுந்து, அதன் முடிவுகள் வெளியான கையோடு அடங்கிப் போகின்றவையாகவே உள்ளன.

மீதமிருக்கின்ற காலத்தை பதவி, பணம் உழைப்பதிலும் சுயமான இருப்பை உறுதி செய்வதிலுமே 99 சதவீதமான முஸ்லிம் அரசியல்வாதிகள் குறியாக இருக்கின்றனர். முஸ்லிம் அரசியல்வாதிகளை கூடவே இருந்து கெடுக்கின்ற, அரசியல் பிரமுகர்கள், இணைப்பாளர்கள், செயலாளர்கள், எடுபிடிகளின் சமூக அக்கறையற்ற மனநிலையும் இதற்கு காரணிமாகிவிடுகின்றது.

முஸ்லிம்களின் இழப்புகளுக்கு, அரசியல்வாதிகளின் பிழைதான் பிரதானமானது என்றாலும், இதற்கப்பால் சமூகத்தில் உள்ள வேறு பல தரப்பினரும் மறைமுகக் காரணிகளாக இருக்கின்றனர்.

முஸ்லிம் அரசியலை ஒழுங்குபடுத்துவதில், புத்திஜீவிகளின் பொறுப்பை அவர்கள் சரிவர நிறைவேற்றவில்லை. ஓரிரு புத்திஜீவிகளைத் தவிர மீதமுள்ள ஆயிரக்கணக்கான கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோர் இவ்வரசியலை சீரமைப்பதற்காக முன்னிற்கவில்லை. அந்தவகையில், முஸ்லிம்களை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட தென்கிழக்குப் பல்கலைக்கழக சமூகம், இந்தப் பணியைச் சரிவரச் செய்யவே இல்லை.

ஊர் வாரியான முஸ்லிம் அரசியலை, பள்ளிவாசல்கள் வழிப்படுத்தவில்லை. தேசிய அடிப்படையில் முஸ்லிம் சமூகத்தின் நலன்களைப் புறக்கணித்து, முஸ்லிம் எம்.பிக்கள் எடுக்கின்ற முடிவுகள், நகர்வுகளை ஜம்மியத்துல் உலமா சபை போன்ற தேசிய அமைப்புகள் தட்டிக் கேட்கவில்லை. முஸ்லிம்களுக்கான அரசியல் என்பது, எவ்வாறு இருக்க வேண்டும்? அதன் நெறிமுறைகள், விழுமியங்கள் எவ்வாறு பேணப்பட வேண்டும் என வகுப்பெடுக்கத் தவறி விட்டன.

தமிழர்கள் ஆயுத ரீதியாக முடக்கப்பட்ட பிறகும் கூட, சர்வதேச அளவில் அவர்களது பிரச்சினைகள் முக்கியத்துவம் பெறுவதற்கு முக்கிய காரணம், 'தமிழ் டயஸ்போரா' எனும் புலம்பெயர் செயற்பாட்டாளர்கள் எனலாம். அந்த வகையில், முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை உறுதிப்படுத்தும் விடயத்தில், புலம்பெயர் முஸ்லிம்களின் செயற்பாடுகள் மிகக் குறைவாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, முஸ்லிம் சமூகம் இந்த அளவுக்கு பின்னடைவைச் சந்திப்பதற்கு, இன்னுமொரு தரப்பு முக்கிய காரணியாக இருந்து வருகின்றது. அவர்கள்தான் முஸ்லிம் மக்கள்; அதாவது வாக்காளப் பெருமக்கள்!

முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் பற்றிய எந்த அறிவும் அனுபவமும் இல்லாத ஆட்கள் பலர், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

'இவர்கள் இதற்கு சரிப்பட்டு வரமாட்டார்கள்' எனத் தெரிந்த பிறகும் கூட, பணத்தாசை, பதவியாசை, பெண் ஆசை, மண் ஆசை பிடித்த பலர் மீண்டும் மீண்டும் எம்.பியாக தெரிவு செய்யப்படுகின்ற அபத்தம் எல்லாம், முஸ்லிம் சமூகத்தில் மட்டும்தான் நடக்கின்றது.

தமிழர் அரசியலோடு, முஸ்லிம் அரசியலை ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் எந்தளவுக்கு அடிமட்டத்தில் இருக்கின்றோம் என்பது புரியும். ஏன் நல்ல அரசியல்வாதிகளை நாம் பெறவில்லை என்பதும், ஏன் முஸ்லிம்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்பதும் தெளிவாகும்.

இப்போது, நாட்டில் ஒருவித கொதிநிலை ஏற்பட்டு இருக்கின்றது. வடக்கில் புதைகுழிகளும் தொல்பொருள் பிரச்சினைகளும் உருவெடுத்து இருக்கின்றன. தெற்கில் வீரகேசர போன்றோர் வெளிப்படையாகவே தமிழ்த் தரப்பை எதிர்த்தாடுகின்றனர்; அதற்காக களத்தில் விடப்பட்டுள்ளனர். மறுபுறத்தில், இனமுறுகலை எந்தத் தருணத்திலும் தோற்றுவிக்கும் அபாயக் களமாக குருந்தூர்மலை ஆகியிருக்கின்றது.

இத்தனைக்கும் இடையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்யவுள்ளார். 'இவ்வாறான நெருக்கடிகள் எல்லாம் இருக்கின்றது. எனவே பிறகு பார்ப்போம்' என்ற தோரணையில் (முஸ்லிம் அரசியல்வாதிகளைப் போல) தமிழ் அரசியல்வாதிகள் வாழாவிருக்கவில்லை.

அவர்கள் இந்தியா ஊடாக, மீண்டும் அழுத்தம் கொடுப்பதற்கான எல்லா நகர்வுகளையும் மேற்கொண்டார்கள். இதன் விளைபயனாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதுடெல்லி புறப்பட முன்னர், இன்று (18) தமிழ் எம்.பிக்களை கொழும்பில் சந்திக்கவுள்ளதாக தெரிகின்றது.

இப்படியான ஒரு நகர்வை, முஸ்லிம் எம்.பிக்கள் செய்ததுண்டா? முஸ்லிம் நாடுகளை, இலங்கை முஸ்லிம்கள் விடயத்தில் செல்வாக்குச் செலுத்தும் நாடுகளாக பயன்படுத்தியதுண்டா? முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளை வென்றெடுப்பதற்காக கூட்டாகவும் தொடர்ச்சியாகவும் குரல்கொடுக்க முடியாமல் முஸ்லிம் அரசியல்வாதிகளைத் தடுப்பது எது என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

முஸ்லிம்களுக்கு ஏகப்பட்ட காணிப் பிரச்சினைகள் உள்ளன. இன, மத உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. அரச சேவை, உயர் பதவி, நிர்வாகசேவை நியமனங்களில் உரிய பங்கு வழங்கப்படவில்லை. முஸ்லிம் ஒருவர் அரசாங்க அதிபராக இல்லை. முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட கிழக்கு மாகாணத்துக்குக் கூட ஒரு முஸ்லிமோ கிழக்கைச் சேர்ந்தவரோ ஆளுநராக நியமிக்கப்படவில்லை.

இவற்றுக்கெல்லாம் மேலாக, இனப்பிரச்சினை தீர்வு பற்றி தொடர்ச்சியாக பேசப்பட்டு வருகின்றது. இது விடயத்தில் முஸ்லிம் சமூகத்தின் பங்கும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. ஆயினும், தமிழ்த் தரப்புடன் பலசுற்றுப் பேச்சுகள் இடம்பெற்ற போதும், முஸ்லிம்களுடன் இன்னும் அரசாங்கம் பேசவே இல்லை. முஸ்லிம்களுடனும் பேசுவோம் என்று ஜனாதிபதி அறிவித்திருந்தார். இரண்டு, மூன்று முஸ்லிம் எம்.பிக்கள் அதற்கான கோரிக்கையை அண்மையில் முன்வைத்திருந்தமை நல்ல விடயமே. ஆனால், அது இன்னும் நடக்கவில்லை.

ஏனெனில், இந்தக் கோரிக்கை, இந்த அழுத்தம் ஒட்டுமொத்த முஸ்லிம் தலைவர்கள், எம்.பிக்களாலும் கூட்டாக முன்வைக்கப்படவில்லை. எனவே, வழக்கம்போல முஸ்லிம் தரப்பின் பலவீனம் வெளிப்பட்டுள்ளது. ஆகவே வழக்கம் போல கையாளலாம் என அரசாங்கம் கருதலாம்.

அரசாங்கம், தமிழ் தரப்பை அவதானமாகக் கையாள்வதும், முஸ்லிம் அரசியல்வாதிகளை அல்லது முஸ்லிம் தரப்பை தொடர்ச்சியாக குறைத்து மதிப்பிடுவதற்கும் முழுமுதற்காரணம், மேலே குறிப்பிட்ட அவர்களது கடந்தகால போக்குகளும்தான் என்பதை விளங்கிக் கொள்ளாத வரை விடிவுபெற மாட்டோம்.

'யாழ்ப்பாண அரச' கால வரலாறு கூறும்

# சங்கிலியன் தோரண வாசல்


பேராசிரியர் ப. புஷ்பரட்ணம்
தலைவர்,
யாழ்ப்பாண மரபுரிமை மையம்



வடஇலங்கையில் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட யாழ்ப்பாண அரசு, ஏறத்தாள 350 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்துள்ளது. பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்கள், கல்வெட்டுகள், ஐரோப்பியர் கால ஆவணங்கள் என்பன, இவ்வரசு பற்றியும் அதன் நான்கு பக்க அரண் கொண்ட அரசமாளிகை, அதிலிருந்த பெரிய கோவில், அரச அதிகாரிகள், படைவீரர்கள் ஆகியோரின் இருப்பிடங்கள், பூங்காவனம், புனித ஜமுனா ஏரி, நீதிமன்றம், நாற்றிசைக் கோவில்கள், காவலரண்கள், கோட்டைகள் முதலியன பற்றியும் கூறுகின்றன.

அவ்வரலாற்றை மீள்நினைவுபடுத்துவதாகவே இன்றும் நல்லூரின் சிறிய வட்டாரத்துக்குள் எஞ்சியிருக்கும் ஜமுனா ஏரி, மந்திரிமனை, சங்கிலியன் அரண்மனை, சங்கிலியன் தோரணவாசல் முதலான மரபுரிமைக் கட்டடங்களும் நினைவுச் சின்னங்களும் காணப்படுகின்றன.

நல்லூரில் அரசமைத்த பாண்டிய படைத் தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகளின் வழிவந்தவர்கள் சிங்கையாரியன், கங்கைநாடான், சேதுகாவலன் என்ற சிறப்புப் பெயர்களையும் செகராசசேகரன், பரராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயர்களையும் பெற்றிருந்தனர்.

இவர்களின் ஆட்சி, 1567இல் முடிவுற்றதன் பின்னர், இங்கு முதலாம் சங்கிலி, காசிநயினார், பெரியபிள்ளை, புவிராஜபண்டாரம், எதிர்மன்னசிங்க குமாரன், இரண்டாம் சங்கிலி முதலான சுதேச மன்னர்களின் ஆட்சி நிலைபெற்றது. இவ்வரசமைந்த பிரதேசத்தை 14ஆம் நூற்றாண்டுக்கு உரிய 'நம்பொத்த' என்ற சிங்கள நூல் 'தெமளபட்டன' (தமிழ்ப்பட்டினம்) எனவும், பாளி இலக்கியங்கள் 'ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு' எனவும் தமிழ் இலக்கியங்கள் 'நல்லூர் இராசதானி', 'யாழ்ப்பாண இராச்சியம்' எனவும், தமிழகக் கல்வெட்டுகள் 'யாழ்பாணயன்பட்டினம்', 'யாழ்ப்பாண தேசம்' எனவும், போர்த்துக்கேயர் ஆவணங்களில் 'யவ்னா' எனவும் கூறுகின்றன.

1658 இல் ஒல்லாந்து தேசாதிபதியாக இருந்த பான்கூன்ஸ் என்பவர், இவ்வரசின் ஆதிக்கம் திருகோணமலையில் இருந்து கற்பிட்டி வரையான ஒரு நேர்கோட்டின் மூலம், இலங்கையின் ஏனைய பகுதியிலிருந்து பிரிக்கப்பட்டு இருந்ததாகக் கூறுகின்றார்.

இந்நிலையில், கி.பி 14 ஆம் நூற்றாண்டு இலங்கை அரசியல் நிலை தொடர்பாக, 'ராஜாவலிய' என்ற சிங்கள நூல், தென்னிலங்கையில் இருந்த கம்பளை, றயிகம அரசைக் காட்டிலும், யாழ்ப்பாண அரசு படை பலத்திலும் பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும், யாழ்ப்பாண மன்னன் மலைநாட்டில் இருந்தும், கீழ்நாட்டில் இருந்தும், ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறைபெற்றான் எனவும் கூறுகின்றது.

மேலும், சமகால வரலாறு கூறும் 'நிகாய சங்கிரகய' மற்றும் 'ராஜாவலிய' முதலான சிங்கள நூல்கள், கம்பளை அரசனுக்கு எதிராக யாழ்ப்பாண மன்னன் அனுப்பிய படை தரைவழியாகவும் கடல்வழியாகவும் நீர்கொழும்பு, சிலாபம், வத்தளை, கொழும்பு, தெமட்டக்கொடை, கோற்கான ஆகிய இடங்களைக் கைப்பற்றியதாகக் கூறுகின்றன. இதை தென்னிலங்கையில் கோகாலை மாவட்டத்தில் 'கொட்டகம' என்ற இடத்தில் கிடைத்த யாழ்ப்பாண அரசுகாலக் கல்வெட்டும் உறுதிசெய்கின்றது.

இந்நிலையில், யாழ்ப்பாணத்தின் மீது போர்த்துக்கேயர் படையெடுத்த காலத்தில், சங்கிலி மன்னன் தலைநகரைப் பாதுகாக்க 12,000க்கும் மேலான போர் வீரர்களை நிறுத்தி இருந்தான் என குவேறோஸ் சுவாமியார் கூறுகின்றார்.

கி.பி 14ஆம் நூற்றாண்டு, இலங்கை வந்த மொறோக்கோ நாட்டுப் பயணியான இவுன் பற்றுற்றாதான், 'ஆரியச்சக்கரவர்த்தி மன்னர்களில் ஒருவனை பத்தள என்ற இடத்தில் (புத்தளம்?) சந்தித்து உரையாடியது பற்றியும், அம்மன்னனின் பண்பு, பரோபகாரம், கடற்படைக் கப்பல்கள், மிகப்பெரிய அளவில் நடைபெற்ற வெளிநாட்டு வர்த்தகம், அம்மன்னன் தங்கியிருந்த துறைமுகத்துக்கு அருகே மலைபோல குவிக்கப்பட்டிருந்த கறுவாவை மலையாளம், தமிழகம் ஆகிய இடங்களிலிருந்து வந்த வணிகர்கள் புடவைகளைக் கொடுத்து, அதற்குப் பதிலாக கறுவாவைப் பெற்று, கப்பல்களில் ஏற்றிச் சென்றனர்' என்பது பற்றி, தனது நூலில் விரிவாகக் குறிப்பிடுகின்றார். மேலும், அவர் ஆரியச்சக்கரவர்த்தி மன்னனுடைய நூற்றுக்கணக்கான கப்பல்கள், ஒரு சமயத்திலேயே யெமென் தேசத்தை நோக்கி சென்றுகொண்டிருந்ததைத் தான் பார்த்ததாகவும் குறிப்பிடுகிறார்.

இவ்வரலாற்று ஆதாரங்கள், போர்த்துக்கேயர் இலங்கை வந்த காலத்தில் கோட்டை, கண்டி அரசுகளைப் போல், யாழ்ப்பாண அரசும் பலமான நிலையில் இருந்துள்ளதைக் காட்டுகின்றன. ஆயினும், தென்னிலங்கை இராசதானிகளின் மரபுரிமைச் சின்னங்கள், பெருமளவுக்குப் பாதுகாக்கப்பட்டு இருப்பதைப் போல், யாழ்ப்பாண அரசு கால மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்படவில்லை. இதற்குப் பல காரணங்கள் உண்டு.

அவற்றுள், வடஇலங்கையில் ஆட்சிபுரிந்த போர்த்துக்கேயரும் பின் வந்த ஒல்லாந்தரும் சுதேச மக்களின் கலை மரபுக்கு உரிய கட்டடங்களை அழித்துவிட்டு, அவ்விடங்களில் தமது கலை மரபுக்கு உரிய கட்டடங்களை அமைத்தமை முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

அவற்றுள் இரண்டாம் சங்கிலி மன்னனை வெற்றி கொண்ட போர்த்துக்கேயர், சிறிது காலம் நல்லூர் இராசதானியைத் தமது நிர்வாக மையமாகப் பயன்படுத்திவிட்டு, பின்னர் அங்கிருந்த கட்டடங்களை அழித்து, அவ்விடங்களில் தமது கலைமரபில் கத்தோலிக்க தேவாலயம், நிர்வாக மையங்களை அமைத்தனர்.









பின்வந்த ஒல்லாந்தர், நல்லூர் இராசதானியிலும் பிற இடங்களிலும் இருந்த போர்த்துக்கேயரது கட்டடங்களை, தமது கலை மரபுக்குரிய கட்டடங்களாக மாற்றியமைத்தனர். அவற்றை வடஇலங்கையின் பல இடங்களிலும் இன்றும் காணமுடிகின்றது.

மேலும் மதம் மாறி முதலியார், கங்காணி முதலான பதவிகளைப் பெற்ற சுதேசிகளும், தமது இல்லத்தை, அதன் முகப்பை ஒல்லாந்தர் கலைமரபில் அமைத்துக் கொண்டனர். ஒல்லாந்தர் ஆட்சியின் பிற்பகுதியில் மத சுதந்திரம் பெற்ற சுதேச மக்கள், யாழ்ப்பாண இராசதானி கால இந்து கோவில்கள் இருந்த இடங்களில் அல்லது அதற்கு அருகில் பழைய பெயரில், புதிய கோவில்களைக் கட்டிய போது, ஒரு சில கோவில்கள் கட்டமைப்பிலும், ஒல்லாந்தர் காலக் கலைமரபின் செல்வாக்கு ஏற்பட்டது.

இவை, தமிழரின் பாரம்பரிய கட்டடக் கலைமரபில் புதிய கலைமரபின் செல்வாக்கும் இணைந்து கொண்டதைக் காட்டுகின்றது. இதற்கு யாழ்ப்பாண இராசதானி கால மரபுரிமைச் சின்னங்களும் விதிவிலக்காக இருக்கவில்லை.

ஐரோப்பியரது 327 ஆண்டுகால ஆட்சியில், யாழ்ப்பாணம் அதன் நிர்வாகத் தலைமைப் பீடமாக இருந்த போதும், நல்லூர் இராசதானி இருந்த இடம், அவர்களது நிர்வாக, சமய, பண்பாட்டு நடவடிக்கைகளின் முக்கிய மையங்களில் ஒன்றாக இருந்துள்ளது.

இதன் மூலம், நல்லூர் இராசதானி கால வரலாற்று நினைவுகள் தொடரவும், அதன் மரபுரிமைச் சின்னங்கள் புதிய கலைமரபுடன் இணைந்து வளர்வதற்கும் வாய்ப்பாக இருந்தது. அதன் ஓர் அடையாளமாகவே, தற்போது மீளுருவாக்கப்பட்ட 'சங்கிலியன் தோரணவாசல்' பார்க்கப்படுகின்றது.

இந்நினைவுச் சின்னம், வேறு சில பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டு இருந்தாலும், தமிழ் மக்களின் நீண்டகால வரலாற்றில் 'சங்கிலியன் தோரண வாசல்' என்ற பெயரே நிலைத்திருக்கின்றது.

1970க்குப் பின்னர் இந்நினைவுச் சின்னத்தைப் பாதுகாக்க, யாழ்ப்பாணத்து அரச நிர்வாகம், பொது அமைப்பு, தனி நபர்கள் சில முயற்சிகளை எடுத்துள்ளனர். 2007 இல் இலங்கை தொல்லியல் திணைக்களம் இதை யாழ்ப்பாண அரசுகால மரபுரிமைச் சின்னங்களில் ஒன்றாகப் பிரகடனப்படுத்தி உள்ளது.


2021 இல் உருவான யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் நிதிப் பங்களிப்போடு, தொல்லியல் திணைக்கள அனுமதியும் அனுசரணையும் பெற்று, இந்நினைவுச் சின்னம் மீளுருவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் இராசதானி காலத்தை நினைவுபடுத்தும் மரபுரிமைச் சின்னங்களில் ஆரியகுளத்தை தொடர்ந்து, மீளுருவாக்கம் செய்யப்பட்டு பாதுகாக்கப்படும் இரண்டாவது மரபுரிமைச் சின்னம் என்ற பெருமை, இச்சங்கிலியன் தோரண வாசலுக்கு உண்டு.

இவ்வாறு, யாழ்ப்பாண இராசதானி கால வரலாற்றை நினைவுபடுத்தும் சங்கிலியன் தோரண வாசலை மீள்புனரமைப்பு செய்து, பாதுகாக்கும் பணிகள் 22ஆம் திகதி புரட்டாதி மாதம் 2022 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இப்புனரமைப்புக்கான முழுமையான நிதியை, யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி பேராசிரியர் சி. இரவிராஜ் நன்கொடையாக வழங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மனிதரில் தொற்றி வாழும் மனஅழுத்தம்




ரிகாஸா ரிபாஸ்
ஊடகக் கற்கைகள் துறை,
இரண்டாம் வருடம்,
யாழ்ப்பாண பல்கலைக் கழகம்

யதார்த்த உலகின் நிமிடங்களில் எல்லாம் நீங்காமல் இடம் பிடித்து, தற்காலத்தில் மனிதனில் தொற்றி வாழும் நோயாக மனஅழுத்தத்தை இனங்காண முடிகிறது. ஆங்கிலத்தில் Stress எனும் சொல்லால் அடையாளப்படுத்தப்படும் மனஅழுத்தமானது, குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரையும் தன் வட்டத்துக்குள் ஈர்த்து, மனிதனை தடுமாறச் செய்யும் பேராற்றலைக் கொண்டுள்ளது.

மனச்சோர்வு, மனஅழுத்தம், மன உளைச்சல் முதலான இம் மூன்றும் வெவ்வேறு வார்த்தைகளாகக் காணப்பட்டாலும் அடிப்படையில் ஒற்றை விளக்கத்தையே தருகின்றன.

மனிதனில் மனரீதியாக ஏற்படும் உணர்வு, தாக்கங்களுக்கு சரியான முறையில் எதிர்ச் செயலை செய்ய முடியாத நிலையையே மனஅழுத்தம் என்று கூறலாம். மனித மனம் துக்கத்தையும் சந்தோஷத்தையும் மாறிமாறி அனுபவிக்கின்றது. எனினும், எதிர்மறையான சிந்தனைகளுக்கு ஆட்படும் விதமானது, ஒவ்வொரு தனிமனிதனில் இருந்தும் சற்று வேறுபட்டே காணப்படுகின்றது.

மனித மனம் நிம்மதியை இழக்கும் வேளைகளில் உண்டாகும் அழுத்தமானது, முற்றிலும் மனிதனில் இருந்து விடுபட வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளைக் கடந்து செல்லும் பக்குவத்தை ஒவ்வொரு மனிதனும் அவசியம் பெற்றிருத்தல் வேண்டும். எனினும், அப்பிரச்சினையை வாழ்நாள் முழுதும் அழுத்திப் பிடிக்க எண்ணுவது, மனஅழுத்தத்தின் தீவிர நிலையையே உண்டாக்கும். மனஅழுத்தம் தீவிர நிலையை அடைவதைத் தவிர்த்து, நம் பயணத்தைத் தொடர்வதே சிறந்தது.

உடற்சோர்வு, தூக்கமின்மை, தாழ்வு மனப்பான்மை, எந்தச் செயலிலும் ஈடுபாடின்மை, மனச்சோர்வு நிலை, பசியின்மை, கவனச் சிதறல் முதலான பல காரணங்கள், மனஅழுத்தத்துக்கு அறிகுறிகளாகக் காணப்படுகின்றன.

ஒருவர் எந்நேரமும் துக்கத்தை வெளிப்படுத்துபவராக இருக்கும் பட்சத்தில், அவர் மனதளவில் அழுத்தத்தை அனுபவிக்கிறார். பல ஆளுமைகளைக் கொண்ட நபர்கள், தங்களுக்குள்ளும் மனஅழுத்தங்களை அனுபவிப்பர். என்றாலும், வெளியில் அந்நிலையை வேறொருவருடன் பகர்வதற்கு முன்வர மாட்டார்கள். ஏனென்றால், தாங்கள் பலவீனமானவர்கள் என்று அடுத்தவர் உணர்ந்து விடக்கூடாது என்ற உணர்வை அவர்கள் பெற்றிருப்பர்.

தொழில், குடும்பம், கல்வி, சூழல் ரீதியாக ஒவ்வொரு தனிமனிதனும் வெவ்வேறு காரணங்களுக்காய் மனரீதியான அழுத்தத்தை அனுபவிக்கின்றனர். மனஅழுத்தத்தில் இருக்கும் ஒருவர், தான் காணும் உலகை கறுப்புக் கண்ணாடியைக் கொண்டு பார்ப்பதைப் போன்ற உணர்வையே பெறுவார். நல்ல விடயங்கள் அவரைச் சுற்றி நடந்தாலும், எந்த விதமான நல்லதும் தங்களை நெருங்குவதில்லை என்ற எதிர்மறையான சிந்தனைகளைத் தனக்குள் தானே விதைத்து, மனதால் அவதிப்படுவர்.

எந்நேரமும் தற்கொலையை பற்றி எண்ணும் மனநிலை, மனஅழுத்தத்தின் தீவிர நிலையாகும். அவ்வாறான தருணங்களில் தங்களைத் தாங்களே கோழையாக மாற்றுவதைத் தவிர்த்து, மனஅழுத்தத்தில் இருந்து வெளிவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதே சிறந்தது.

வாழ்க்கையின் எதிர்பார்ப்புகள் எப்போதும் வித்தியாசமானவை. அவ்வகையில், தாங்களே தங்களுக்குள் வைத்திருக்கும் எதிர்பார்ப்பு மற்றும் அடுத்தவர்கள் தங்கள் மேல் வைத்திருக்கும் எதிர்பார்ப்பு என இரண்டு எதிர்பார்ப்புகளையும் எண்ணி, எல்லா விடயங்களும் நேர்த்தியாக மட்டுமே நடக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் தேவையில்லாத மனஅழுத்தத்தையே உண்டாக்கும்.

எல்லா வகையான அழுத்தங்களையும் எல்லோராலும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது. மனிதனது மனம் எப்போதும் நிலைத்திருக்கும் தன்மையையே வேண்டி நிற்கும். எனினும், அவ்வாறான எண்ணம் யதார்த்தத்துக்கு என்றுமே ஒத்துப் போவதில்லை.

மனத்துக்கும் மூளைக்குமான தொடர்பு மிகவும் நெருக்கமானது. Dopamine and Serotonin இரசாயணங்கள் மூலம், நம் மூளை அதிகமான மகிழ்ச்சியை அனுபவிக்க தலைப்படுகின்றது. என்றாலும், மகிழ்ச்சிக்கான தேவையை யாருமே உணர்வதில்லை. சாதாரண மனஅழுத்தங்களை, நமது அன்றாட செயற்பாடுகள் மூலமே சரி செய்து கொள்ள முடியும்.

உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் நிர்ணயிக்கக்கூடிய உறுப்பான இருதயம், தொடர்ச்சியாக அழுத்தங்களை அனுபவிக்கும் போது Cortisol என்று சொல்லப்படும் மனஅழுத்த ஹார்மோனை உற்பத்தி செய்து, சீரற்ற இதய நோய்களை உண்டாக்கும். இதன்விளைவாக இருதயம் பலவீனமடைந்து, அதிக இரத்த அழுத்தம், இதய வால்வு சுருக்கம், இதய அடைப்பு போன்ற நோய்கள் ஏற்படுவதற்கும் வாய்ப்பாக அமைந்து விடுகின்றது.

அதுமட்டுமல்லாமல், அதிர்ச்சியான சம்பவங்களைக் கேள்விப்படும் போது, உடனடி இதய அடைப்புக்கும் வழிவகுக்கும் நிலை அதிகம் என்று கூறலாம். எனவே, இதய நோயாளிகள், மனஅழுத்தம் குறித்து மிகவும் கவனமாக இருப்பது அவசியமாகின்றது.

தோல் சார்ந்த பிரச்சினைகளையும் மனஅழுத்தம் எளிதில் வழங்கிவிடுகின்றது. தோல்களில் இரத்த ஓட்டம் குறைவடைந்து முகச்சுருக்கம், கருவளையம் போன்ற பிரச்சினைகளை உண்டாக்குவது மட்டுமல்லாமல், சருமத்தில் எண்ணெய் சுரந்து முகப்பருக்களையும் உண்டாக்கும். மனஅழுத்தத்தால் அதிகம் பாதிக்கப்படுவதால் செரிமான பிரச்சினைகளையும் எதிர்கொள்வர்.

இன்று, அழுத்தமாய் விளங்கும் பல விடயங்கள் நாளை, ஒன்றுமில்லை என்றாகிவிடும். நீங்கள் மனஅழுத்தத்தில் இருந்து வெளிவர வேண்டுமென்ற எண்ணம் கொண்டவராக இருப்பின், உங்களுடைய பிரச்சினைகள் மற்றும் சவால்களை, உங்களுக்கு நம்பிக்கையான ஒருவருடன் பகர்ந்து கொள்ளுங்கள். அவ்வாறு பகர்ந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில், உங்களை அறியாமலேயே உங்களின் பாதி சுமை குறைந்ததாக எண்ணுவீர்கள்.

அதுமட்டுமன்றி, மகிழ்ச்சியளிக்கக் கூடிய செயல்களை செய்வதன் மூலமும் ஏதாவதொரு வகையில் மனஅழுத்தத்தில் இருந்து விடுபடலாம். உடற்பயிற்சி என்பது ஆரோக்கியத்தின் வெளிப்பாடு. உடலின் ஆரோக்கியத்தைப் பேணுவதைப் போன்றே, மனதின் ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக, தினமும் உடற்பயிற்சியில் ஈடுபடுவது சிறந்தது.

அது மட்டுமன்றி, மூளையின் செயற்பாட்டை புத்துணர்ச்சியுடன் பேணுவதற்கு தினமும் எட்டு மணித்தியால தூக்கம் அவசியமாகின்றது. தூக்கத்தால் மனம் நிம்மதியடைந்து, தேவையில்லாத அழுத்தங்களில் இருந்து மனதை ஆறுதல் அடையும்.

மன அழுத்தமான நிலையில் சிரிப்பது என்பது மிகவும் கடினமான விடயம். என்றாலும் அவ்வாறான நிலையில் வாய்விட்டு சிரிக்கும் போது, நம்மை அறியாமலே நமது மனம் இலேசாகும். மனதில் தேக்கி வைத்திருக்கும் தேவையற்ற சுமைகளைக் குறைத்து, தமக்குத் தேவையான விடயங்களை மாத்திரம் கருத்தில் கொண்டு செயற்படுதல், மனநிம்மதியை அளிக்கும்.

தங்கள் வாழ்க்கைப் பயணம் தங்களுக்கானது. ஒருமுறை இழந்தால், மீண்டும் பெற்று விட முடியாது. மனஅழுத்தமற்ற நிம்மதியான வாழ்க்கையை, வாழ்நாள் முழுவதும் பேண வேண்டும் என்றால், தேவையற்ற அழுத்தங்களை குறைத்தே தீர வேண்டும். ஆகவே, மன அழுத்தங்கள் அற்ற மனநிம்மதியான வாழ்வை வாழ்வதற்கு, நாமே முயன்று எதிர்மறையான சிந்தனைகளை உடைத்தெறிந்து, வாழ்க்கையை வெற்றி கொள்ள வேண்டும்.

# தங்க கலரில் தர்ஷா குப்தா



குக் வித் கோமாளி' என்ற நிகழ்ச்சியின் மூலம் பிரபலமான தர்ஷா குப்தா, ஒரு சில திரைப்படங்களில் நடித்தார். தற்போது அவர் திரைப்படங்களில் வாய்ப்புகள் பெறுவதற்காக கிளாமர் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவு செய்து வருகிறார்.

குறிப்பாக, அவர் அண்மையில் நீச்சல் உடையில் எடுத்த போட்டோஷூட் புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை பதிவு செய்தது இன்ப அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் தங்க கலரில் ஜொலித்துக் கொண்டிருக்கும் போட்டோஷூட் புகைப்படங்கள் தர்ஷா குப்தாவின் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இந்தப் பதிவில் அவர் கேப்ஷன் ஆக 'அனைவரையும் நேசி; எல்லோரிடமும் மரியாதையாக நடந்துகொள்; ஆனால் உன் கொள்கையில் உறுதியாக இரு' எனப் பதிவு செய்துள்ளார்.

# 'ஜெயிலர்' இசை வெளியீடு






சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்து முடித்துள்ள 'ஜெயிலர்' திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து தற்போது தொழில்நுட்ப பணிகள் நடைபெற்று வருகிறது. அதுமட்டுமின்றி, இன்னொரு பக்கம் இந்தப் படத்தின் புரமோஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

ஏற்கெனவே இந்தப் படத்தின் 'காவாலா'பாடல் மிகப்பெரிய அளவில் வைரல் ஆன நிலையில் 'ஹூக்கும்' என்ற பாடல் வெளியாகியுள்ளது. இந்த நிலையில் 'ஜெயிலர்' படத்தின் இசை வெளியீட்டு விழா ஜூலை 28ஆம் திகதி பிரமாண்டமாக நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கெனவே ரஜினிகாந்த் நடித்த 'அண்ணாத்த' படத்தின் இசை வெளியீட்டு விழா நடைபெறாத நிலையில், இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழாவை பிரமாண்டமாக நடத்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும் அதே திகதியில் இந்த படத்தின் டிரைலர் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மொத்தத்தில் 'ஜெயிலர்' ரிலீஸ் திகதிக்கு இன்னும் ஒரு சில வாரங்களே இருக்கும் நிலையில் இனி வரும் நாட்களில் விறுவிறுப்பான புரமோஷன் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# "நான் ஆபாச நடிகை தான்" சன்னி லியோன் பதிலடி

நடிகை சன்னி லியோன் குறித்து சர்ச்சைக்குரிய கருத்து தெரிவித்த நடிகை மற்றும் அமைச்சர் ரோஜாவுக்கு சன்னி லியோன் பதிலடி கொடுத்துள்ளார்


கடந்த சில நாள்களுக்கு முன்னர் ஆந்திர மாநில அரசியல்வாதி மற்றும் நடிகர் பவன் கல்யாண் வாராஹி யாத்திரை தொடர்ந்தார். இந்த யாத்திரையின் போது, அவர் ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகன் ரெட்டியை கடுமையாக விமர்சனம் செய்தார்.

இந்த நிலையில், பவன் கல்யாண் குறித்து அமைச்சர் ரோஜா கூறிய போது, "ஆந்திர முதலமைச்சர் ஜெகன் மோகனுக்கு பவன் கல்யாண், ஒழுக்கம் குறித்து கற்றுக் கொடுப்பது, சன்னி லியோன் வேதம் ஓதியது போல் உள்ளது" என்று கூறினார்.

அமைச்சர் ரோஜாவின் இந்தக் கருத்துக்கு பவன் கல்யாண் ரசிகர்கள் உள்பட பலர் கண்டனம் தெரிவித்து வரும் நிலையில், சன்னி லியோன் பதிலடி கொடுத்துள்ளார். "நான் ஓர் ஆபாச நட்சத்திரம் தான்; ஆனால் எனது கடந்த காலத்தை நினைத்து நான் ஒருபோதும் வருத்தப்பட்டதில்லை" என்றார்.

# மீண்டும் த்ரிஷாவுக்கு வாய்ப்பு






இயக்குநர் மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்க இருக்கும் 'கமல் 234' திரைப்படத்தில் த்ரிஷா தான் ஹீரோயின் என்று சொல்லப்படும் நிலையில், அதற்கு முன்பே மணிரத்னம் படத்தில் த்ரிஷா ஒரு படத்தில் இணைய இருப்பதாக கூறப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு வெளியான மணிரத்னம் இயக்கத்தில் உருவான 'ஆயுத எழுத்து' படத்தில் த்ரிஷா முக்கிய கேரக்டரில் நடித்திருந்தார். அதன் பிறகு 18 ஆண்டுகளுக்கு கழித்து மணிரத்னம் இயக்கத்தில் உருவான 'பொன்னின் செல்வன்' மற்றும் 'பொன்னியின் செல்வன் 2' ஆகிய இரண்டு படங்களிலும் த்ரிஷா நடித்திருந்தார்.

இந்த நிலையில் மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன் நடிக்க இருக்கும் 'கமல் 234' படத்தின் நாயகி த்ரிஷா தான் என்று கூறப்படுகிறது. ஆனால், இந்தப் படத்தின் படப்பிடிப்பு தொடங்க இன்னும் ஒரு வருடம் ஆகும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், இந்தப் படத்துக்கு முன்பே மணிரத்னத்தின் மெட்ராஸ் டாக்கீஸ் நிறுவனத்தின் தயாரிப்பில் உருவாக இருக்கும் திரைப்படத்தில் த்ரிஷா முக்கிய கேரக்டரில் நடிக்க இருப்பதாகவும் இந்தப் படம் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

# 'துருவ நட்சத்திரம்' இரண்டாவது பாடல்



விக்ரம் நடிப்பில், கௌதம் மேனன் இயக்கத்தில் உருவான 'துருவ நட்சத்திரம்' திரைப்படம் நீண்ட இடைவெளிக்கு பின்னர் மீண்டும் பணிகள் தொடங்கிய நிலையில் தற்போது இந்தப் படம் வெளியீட்டுக்கு தயாராக உள்ளது. இந்த நிலையில் இந்தப் படத்தின் இரண்டாவது சிங்கிள் பாடல் வரும் 19ஆம் திகதி வெளியாகும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது இந்தப் பாடலின் புரோமோ வீடியோவை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர்.

வெறும் 19 வினாடிகள் மட்டுமே உள்ள இந்த வீடியோ தற்போது வைரல் ஆகி வருகிறது. *His Name Is John* என்ற இந்தப் பாடலை தாமரை எழுதியுள்ளார். ஹறிஸ் ஜெயராஜ் இசையமைத்துள்ளார்.

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு









வவுனியா, தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப் புலவர் சிலை அருகில் நேற்று (17) ஆடிப்பிறப்பு நிகழ்வுகள், வவுனியா மாநகர சபை மற்றும் ஓட்டோ உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் தலைவர் ரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், சோமசுந்தரப் புலவரின் நினைவு தூபிக்கு மலர்மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டதுடன் 'ஆடிப் பிறப்புக்கு நாளை விடுதலை' என்ற பாடலை, வவுனியா பிரமண்டு வித்தியாலய மாணவர்கள் பாடியிருந்தனர். இந்நிகழ்வில், மாநகர சபை செயலாளர் செந்தில்நாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி. ரி லிங்கநாதன், முன்னாள் நகர சபை தவிசாளர் இ. கௌதமன், முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது, ஆடிப்பிறப்பை முன்னிட்டு கூழ், கொழுக்கட்டை என்பன கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பன.

க. அகரன்

# மன்னாரில் நடன பயிற்சி பட்டறை







நடன துறையில் ஆர்வம் உள்ள இளைஞர் – யுவதிகளின் திறமையை மெருகேற்றும் விதமாக, இரண்டு நாள் நடன பயிற்சி பட்டறை சனிக்கிழமையும் (16) ஞாயிற்றுக்கிழமையும் வங்காலை டான்ஸிங் டைமன்ஸ் நடன பயிற்சி கல்லூரியில் நடைபெற்றது.

மன்னார் டான்ஸிங் டைமன்ஸ் பயிற்சி கல்லூரியின் ஒழுங்கமைப்பில் அதன் நிறுவனர் அர்ஜூன் லெம்பேட், ரஞ்சித், நிருஸி, எவரஸ்ரா ஆகிய நடன ஆசிரியர்கள் இணைந்து, குறித்த நடன பயிற்சி பட்டறையை நடத்தியிருந்தனர்.

இதில், மன்னார் மாவட்டம் முழுவதும் இருந்து 50க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்கத்தைய, கிராமிய, பாரம்பரிய ஆகிய நடனங்களுக்கான பயிற்சிகள், மேற்படி பயிற்சி பட்டறை ஊடாக பயிற்றுவிக்கப்பட்டது.

எஸ். றொசேரியன் லெம்பேட்

# கலாசார நிகழ்வும் கருத்துக்களமும்









மனித அபிவிருத்தி தாபனத்தால் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் கனடா பங்காளர் நிறுவன அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய மொழிகள் சமத்துவ மேம்பாட்டு செயற்றிட்டம் (NLEAP) அம்பாறை மாவட்டத்தில் சகவாழ்வுச் சங்கங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் ஓர் அங்கமாக, சகவாழ்வு சங்கங்கள் ஒன்றிணைந்த கலாசார நிகழ்வும் கருத்துக்களமும் கல்முனை கிரிஸ்டா இல்லத்தில் மனித அபிவிருத்தி தாபன அம்பாறை மாவட்ட உதவி இணைப்பாளர் எம்.ஐ றியால் தலைமையில் வியாழக்கிழமை (13) நடைபெற்றது.

இந்நிகழ்வில், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனை பிராந்திய இணைப்பாளர் ஏ.சி.ஏ அப்துல் அஸீஸ் உட்பட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இத்திட்டத்தின் ஊடாக, மொழி உரிமைகள், மொழிக்கொள்கை அமலாக்கம், சமூகங்களுக்கு இடையிலான நல்லுறவை வலுப்படுத்தல் போன்றவற்றை இலக்காக கொண்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

நூருல் ஹுதா உமர்

# புத்தளம் தள வைத்தியசாலைக்கு கண் வில்லைகள்



புத்தளம் மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி அமைப்பின் வேண்டுகோளுக்கு இணங்க, சமூக ஆர்வலர் முஜாஹித் நிசாரின் ஏற்பாட்டில், புத்தளம் தள வைத்தியசாலைக்கு ரூபாய் எட்டு இலட்சம் பெறுமதியான கண் வில்லைகள் வழங்கி வைக்கப்பட்டன.

புத்தளம் தள வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரி டொக்டர் சுமித் அத்தனாயக்காவிடம் கண்வில்லைகளை வழங்கி வைக்கும் நிகழ்வில், புத்தளம் மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி அமைப்பின் தலைவர் எம்.எச் முஹம்மது சபீக்கும் கலந்து கொண்டார். வை.டபிள்யூ.எம்.ஏ சிறீலங்கா அமைப்பின் அனுசரணையுடன் இக்கண் வில்லைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எம்.யூ.எம் சனூன்

# 'நாதம்' விருதுகள்









'தமிழ்மிரர்' மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய செய்தியாளர்களான ரீ.எல் ஜவ்பர்கான், எம்.எஸ்.எம் நூர்தீன் உட்பட எஸ்.எம்.எம் முஸ்தபா, சிவம் பாக்கியநாதன், ஆரூத்ரா, எஸ். உதயகாந்த், கே. ரவீந்திரன், கே. தவபாலரெத்தினம் உட்பட 11 மூத்த ஊடகவியலாளர்கள், ஒரே மேடையில் 'நாதம்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், 'சக்தி' தொலைக்காட்சி செய்தியாளர் எம். நித்தியானந்தன், மாவட்ட தகவல் அதிகாரி வீ. ஜீவானந்தம், தகவல் அலுவலக உத்தியோகத்தர் கமால் இப்றாஹீம் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

'பெற்றிநாதம்' ஊடக வலையமைப்பால் மட்டக்களப்பு தேவநாயகம் மண்பத்தில், ஊடக வலையமைப்பின் பணிப்பாளர் வீ. தயாபரன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில், மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராசா பிரதம அதிதியாகவும் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவக பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி கௌரவ அதிதியாகவும் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் ஆண்டகை, மட்டக்களப்பு இராம கிருஷ்ண மிசன் தலைவர் சுவாமி நீலமாதானந்தஜீ மகராஜ் ஆகியோர் ஆன்மிக அதிதிகளாகவும் கலந்து கொண்டனர். நிகழ்வில், மட்டக்களப்பு ராவணா நடன மன்றத்தினரின் நடன நிகழ்ச்சிகளும் அரங்கேறின.

ரீ.எல் ஜவ்பர்கான்

பாகிஸ்தானுக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# முன்னிலையில் இலங்கை



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் இலங்கை காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் காலியில் நேற்று முன்தினம் ஆரம்பித்த இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 6 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இலங்கை, அப்ரார் அஹ்மட், நசீம் ஷாவிடம் தலா 2 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 312 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், தனஞ்சய டி சில்வா 122 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், கசுன் ராஜித, பிரபாத் ஜெயசூரிய (3), ரமேஷ் மென்டிஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து நேற்றைய இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 5 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

தற்போது களத்தில் செளட் ஷகீல் 69 ஓட்டங்களுடனும், அக்ஹா சல்மான் 61 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். முன்னதாக ஷண் மசூட் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.

# தாய்லாந்தில் தங்கம் வென்ற கம்பளை சுதாகரன்



வீ.ரி. சகாதேவராஜா

தாய்லாந்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிய வுஷு போட்டியில் மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்துக்குட்பட்ட கம்பளையைச் சேர்ந்த கணேசன் சுதாகரன் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.



நேருஜி கால்பந்தாட்ட சுழல் கிண்ணத் தொடர்:

# நுவரெலியா நேஸ்பி சம்பியன்

எஸ்.கே. குமார்

நுவரெலியா யங் பேட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற நேருஜி சுழல் கிண்ணத் தொடரில் நுவரெலியா நேஸ்பி அணி சம்பியனானது.

நுவரெலியா மாநகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற ஏழு பேர் கொண்ட இத்தொடரில் 32 அணிகள் பங்கேற்றிருந்த நிலையில், மாகோஸ்தோட்ட பிரண்ட்ஸ் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் இறுதிப் போட்டியில் வென்றே நேஸ்பி சம்பியனானது.

நேஸ்பி சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் ராஜமாணிக்கம் பிரவீன் பெற்றிருந்தார்.

இறுதிப் போட்டியில் சிறந்த வீரராக நுவரெலியா பிரவீனும், சிறந்த கோல் காப்பாளராக நேஸ்பியின் கோல்காப்பாளரான எஸ். தீபனும், சிறந்த பின்வரிசை வீரராக மாகாஸ்தோட்ட அணியைச் சேர்ந்த அருளும் தெரிவாகினர்.

# அலிகார் ம.வி எல்லேயில் 2ஆம் இடம்



ஒலுமுதீன் கியாஸ் ஷாபி

கிண்ணியா பாடசாலைகளுக்கிடையிலான அண்மையில் நடைபெற்ற வலய மட்ட விளையாட்டு விழாவில், பெண்களுக்கான எல்லேயில் கிண்ணியா அலிகார் மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தைப் பெற்று, மாகாண மட்டப் போட்டிகளில் பங்குகொள்வதற்கான சந்தர்ப்பத்தை தனதாக்கிக் கொண்டது.

# உலக ஸெபக்தக்ரோ போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்ற இலங்கை

எம்.யூ.எம். சனூன்




தாய்லாந்தில் நடைபெற்ற 36 ஆவது அரச கிண்ண உலக கிண்ணத்துக்கான ஸெபக்தக்ரோ போட்டியின், ஆண்கள் பிரிவில் அணிக்கு மூன்று பேர் விளையாடும் றெகு குழு போட்டியில் இலங்கை, சீனா ஆகியன மூன்றாமிடத்தைப் பெற்றன.

இவ் றெகு வகை போட்டித் தொடரில், புள்ளிகளின் அடிப்படையில், முதலாமிடத்தை லாவோஸும், இரண்டாமிடத்தை ஈரானும் வென்றிருந்தன.

இலங்கை அணியில் புத்தளம் நகரைச் சேர்ந்த சகீ அஹ்மத், அதீப் ஹஸன், அஸ்ஹார் ஹுஸைன், ஹஸ்ஸாம் அஹ்மத், முஹம்மத் ஆதிப் ஆகியோரும், கம்பளையை சேர்ந்த முஹம்மத் நுஸ்கியும் விளையாடினர்.

# டொலருக்கு பதிலாக ரூபாய், திர்ஹாமில் வர்த்தகம்

பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரகத்தில் அரசு முறை பயணம் மேற்கொண்டார். அந்த நாட்டு அதிபர் ஷேக் முகமதுவை சந்தித்துப் பேசினார். அப்போது அமெரிக்க டொலருக்கு பதிலாக இந்தியாவின் ரூபாய், அமீரகத்தின் திர்ஹாமில் இருதரப்பு வர்த்தகத்தை மேற்கொள்ள ஒப்பந்தம் கையெழுத்தானது.


சர்வதேச அளவில் அமெரிக்காவின் டொலர் மூலம் வர்த்தகம் மேற்கொள்ளப்படுகிறது. உக்ரேன் போர் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உலக வர்த்தகத்தில் டொலரின் ஆதிக்கத்தை குறைக்க ரஷ்யா, சீனா உள்ளிட்ட பல்வேறு



நாடுகள் தீவிர முயற்சி செய்து வருகின்றன. இந்த சூழலில் இந்திய ரூபாய் சர்வதேச நாணயமாக மாறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது.

இப்போதைய நிலையில் ஜெர்மனி, பிரிட்டன், நேபாளம், பூடான், சிங்கப்பூர், இலங்கை, மாலைத்தீவு, வங்கதேசம், கென்யா, மலேசியா, ரஷ்யா உள்ளிட்ட 18 நாடுகள் இந்திய ரூபாய் அடிப்படையிலான வர்த்தகத்தை ஏற்றுக் கொண்டுள்ளன. இந்த பட்டியலில் தற்போது ஐக்கிய அரபு அமீரகமும் இணைந்துள்ளது.

கேம்பிரிட்ஜ்



# மனிதர்களின் வயதை குறைக்கும் வேதிக் கலவை

மனிதர்களுக்கு வயதாவதை தடுக்கும் வேதிக் கலவையை கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்காவின் ஹார்வர்ட் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து ஹார்வர்ட் விஞ்ஞானி டேவிட் ஷின்கிளயர் தன் ட்விட்டர் பக்கத்தில், "மரபணு சிகிச்சை மூலம் வயதைக் குறைக்க முடியும் என்பதை எங்களது முந்தைய ஆய்வில் நிரூபித்தோம். வேதிக் கலவை மூலமும் வயதைக் குறைக்க முடியும் என்பதை இப்போது நிரூபித்துள்ளோம்.

கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக இது தொடர்பாக எங்கள் குழு தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தது. அந்த ஆராய்ச்சியின் விளைவாக வயதைக் குறைக்கும் மூலக் கூறுகளைக்கண்டு பிடித்துள்ளோம். குறைந்தவிலையில் மனித செல்களுக்கு புத்துணர் வூட்டுவதற்கான ஒரு முன்நகர்வு இது" என்று பதிவிட்டுள்ளார்.

கர்நாடகா

# சிறுத்தையை பிடித்து கட்டிய இளைஞன்

கர்நாடகா மாநிலத்தில் பலரையும் அச்சுறுத்தி வந்த சிறுத்தையை, இளைஞர் ஒருவர் உயிருடன் பிடித்து, பைக்கில் கட்டி, வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கர்நாடக மாநிலம் ஹாசன் மாவட்டத்தில் உள்ள பாகிவாலு (Bagivalu) என்ற இடத்தில் சிறுத்தை ஒன்று உலா வந்துள்ளது. இந்நிலையில், விவசாயி வேணுகோபால் தனது நிலத்திற்கு சென்றார்.

அப்போது மறைந்திருந்த சிறுத்தை வேணுகோபாலை தாக்கியது. இந்த தாக்குதலின் போது வேணுகோபாலின்



கை, கால்கள் மற்றும் உடலில் காயம் ஏற்பட்டது. எனினும் அசராத அவர், சிறுத்தையை எதிர்த்து போராடினார். மேலும், சிறுத்தையின் காலை கயிறு கொண்டு கட்டிய அவர், அதை தனது பைக்கில் கட்டிக் கொண்டு தனது கிராமத்துக்குச் சென்றார். அங்கு அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. வனத்துறையினர் வந்து சிறுத்தையை எடுத்துச் சென்று சிகிச்சை அளித்தனர்.

# குழந்தை கேட்ட 2 ஆவது கணவன்: தாய் செய்த கொடூரம்


ஆந்திரா மாநிலம் ஏலூர் மாவட்டம் வட்லூரை சேர்ந்தவர் 30 வயது பெண்ணுக்கு 2 மகள்கள் உள்ளனர். இந்த பெண்ணின் கணவர் உடல்நலக் குறைவால் 2007 ஆம் ஆண்டு உயிரிழந்த நிலையில், தனது தாய் மாமன் சதீஷ் குமாரை இரண்டவாது திருமணம் செய்து கொண்டார்.

முதல் கணவருக்கு பிறந்த இரண்டு மகள்களுடன் 2 வது ஒன்றாக ஒரே வீட்டில் வசித்து வந்தார் இந்த பெண். இந்த நிலையில், சதீஷ் குமார் தனக்கென வாரிசு வேண்டும் என்று அடிக்கடி தகராறு செய்ய தொடங்கியுள்ளார், அதற்க்கு அந்த பெண் குடும்பக் கட்டுப்பாடு செய்து செய்துள்ளதாகவும், இனி அதற்க்கு வாய்ப்பில்லை என்றும் தெரிவித்துள்ளார். என் மூத்த பொண்ணுகிட்ட குழந்தை பெத்துக்கோ" என்று கூறி சிறுமியை சதீஷிடம் ஒப்படைத்தார்.

# 60 ஆண்டுகளாக காத்திருந்த காதல்

உயர்நிலைப் பள்ளியில் ஒன்றாகப் படித்த ஒரு பெண்ணை ஒருவர் காதலித்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இருவருக்கும் இடையிலான காதல் நிறைவேறவில்லை. ஆனால், 60 ஆண்டுகளுக்குப் பிறகு, அதே பெண்ணை மீண்டும் தொடர்பு கொண்டபோது, இருவருக்கும் இடையே காதல் மலர்ந்தது. வேகமாக தனது காதலைச் சொல்லி அதே பெண்ணை கரம்பிடித்திருக்கிறார் ஒரு மருத்துவர்.


அமெரிக்கா புளோரிடாவில் வசிக்கும் தோமஸ் என்ற மருத்துவர். மேல்நிலைப் பள்ளியில் படிக்கும் போது, நான்சி என்ற பெண்ணை காதலித்து வந்துள்ளார். துரதிர்ஷ்டவசமாக, அந்த நேரத்தில் அவர்களின் காதல்




நிறைவேறவில்லை. இறுதியில் அவர்கள் பிரிந்தனர். ஆனால் சமீபத்தில் 60 ஆண்டுகளுக்கு பிறகு ஒருவரை ஒருவர் தொடர்பு கொள்ள வாய்ப்பு கிடைத்துள்ளது. இவ்வளவு நாள் ஆன பிறகும் ஒருவர் மேல் ஒருவர் வைத்திருந்த காதல் குறையவில்லை என்பதை இருவரும் உணர்ந்தனர். பின்னர் இருவரும் பல மணி நேரம் போனில் பேச ஆரம்பித்தனர். ஒரு நாள் இருவரும் சந்திக்க வேண்டும் என்று நான்சி சொல்ல, உடனடியாக புளோரிடா பறந்தார் தோமஸ்.

புளோரிடா விமான நிலையத்தில் தரையிறங்கியவுடன், தாமஸ் நானிசியிடம் தனது காதலை சொல்வதற்காக முழங்கால் மண்டியிட்டு, உடனே தனது விருப்பத்தை முன்மொழிந்தார். இதைப் பார்த்த நான்சி திகைத்துப் போனார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. இந்த நெகிழ்ச்சி தருணத்தை டொக்டர் தாமஸின் பேஷண்ட் ஒருவர் பதிவு செய்து டிக்டாக்கில் பதிவேற்றியுள்ளார். சிறிது நேரத்தில் அந்த வீடியோ வைரலானது. உலகம் முழுவதும் 5 மில்லியனுக்கும் அதிகமானோர் இந்த வீடியோவை பார்த்து உணர்ச்சி வசப்பட்டனர்.

# பாகிஸ்தானில் இந்து கோயில் மீது ரொக்கெட் லோஞ்சர் தாக்குதல்



பாகிஸ்தானில் அடுத்தடுத்து இரண்டு இந்து கோயில்கள், ஜேசிபி மற்றும் ரொக்கெட் லோஞ்சர்களால் தாக்கி இடிக்கப்பட்டது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

கராச்சியின் சோல்ஜர் பஜார் பகுதியில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டது. அப்போது, அப்பகுதியில் இருந்த 150 ஆண்டுகால பழமையான மாரிமாதா கோயிலை ஒரு கும்பல் ஜேசிபி மூலம் இடித்து தள்ளியது.

கோயில் இடிக்கப்பட்டது கண்டு மக்கள் அதிர்ச்சி அடைந்த 24 மணி நேரத்திற்குள், காஷ்மோர் பகுதியில் உள்ள மற்றொரு கோயிலை மர்மக் கும்பல் ரொக்கெட் லோஞ்சர்களால் தாக்கி சிதைத்தனர். இந்த சம்பவத்தின் போது, குடியிருப்புகள் மீதும் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது. எனினும் யாரும் பாதிக்கப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 18 ஜூலை 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.